
# மண்

இதழ் 187

ஜேர்மனி / 2018
தை - மாசி / January - February



வாழும்போதே வாழ்த்தப்பட
வேண்டியவர்

## மூத்த எழுத்தாளர் லெ.முருகபூபதி
அவுஸ்திரேலியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மண் சஞ்சிகையின் வாசகர்கள் திருமதி இந்திரலக்ஷ்மி அம்பிகைபாலன், திருமதி கிறசியல்லா சிவகாந்த் ஆகியோரின் நிதி உதவியால் கிளிநொச்சி ரூத் மிஷனில் (சிறுவர் காப்பகம்) நத்தார் விழா கொண்டாடப்பட்டது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே


- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர்போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவி நிதி



| | |
|---|---|
| முகவரி: | V. Sivarajah<br>Am Windhoevel 18a<br>47249 Duisburg<br>Germany |
| தொலைபேசி: | 0203/8073898 |
| தொலைநகல்: | 0203/8073898 |
| மின்னஞ்சல்: | v.sivarajah@arcor.de |
| வங்கிவிபரம்: | Mann (Erde) Verein e.V. Duisburg<br>Stadtsparkasse Duisburg<br>Kontonummer: 225 000 421<br>Bankleitzahl: 350 500 00<br>IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21<br>SWIFT-BIC: DUISDE33XXX |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் கருத்து...

காணாமல் ஆக்கப்பட்டவர்களுடைய உறவினர்கள் நடத்துகின்ற போராட்டம் ஒரு வருடத்தை எட்டப்போகிறது. தொடக்கத்தில் பெரும் கவனிப்பைப் பெற்ற இந்தப் போராட்டம் இன்று யாராலுமே கவனிக்கப்படாத நிலைமைக்குள்ளாகியுள்ளது. அப்போது ஊடகங்கள், அரசியற் கட்சிகள், அரசியல் தலைவர்கள் எனப் பல தரப்புகளும் இந்தப் போராட்டத்துடன் தங்களை இணைத்து அடையாளப் படுத்திக் கொள்வதற்குப் போட்டியிட்டன. இப்பொழுது இதையெல்லாம் மறந்துவிட்டு இந்தத் தரப்புகள் எல்லாம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தங்களைக் கரைத்துக் கொண்டிருக்கின்றன.

அரசாங்கம் இந்தப் போராட்டத்தைக் கவனிக்காமல் கடந்து செல்ல முற்படலாம். ஆனால், தமிழ்த்தரப்புகளே இதைப் பாராமுகமாகக் கைவிட்டிருப்பதுதான் கவலைக்குரியது. இது சாதாரணமான ஒன்றல்ல. மக்களும் கூடத்தான் இதைப் பொருட்படுத்தாமல் விட்டு விட்டார்கள்.இப்பொழுது இவர்களில் பலருடைய தலைக்குள்ளும் நிறைந்து கிடப்பது உள்ளூராட்சித் தேர்தல் கனவுகளே. இந்த நிலையில் "இவர்களால் உருப்படியாக எதுவுமே நடக்காது" என உணர்ந்த சனங்கள், தாங்களாகவே போராட்டங்களை முன்னெடுத்தனர்.

அப்படி முன்னெடுக்கப்பட்ட போராட்டங்களின் வழியாக கேப்பாபிலவு, பிலவுக்குடியிருப்பு, வலி வடக்கு, மயிலிட்டி, வசாவிளான் போன்ற பகுதிகள் விடுவிக்கப்பட்டன. ஏனைய இடங்கள் இன்னும் படையின் பிடியிலேயே உள்ளன. இதையும் சனங்கள் விடுவித்தால்தான் உண்டு. இந்தப் பிரச்சினைக்காக குத்தி முறிந்த அரசியல்வாதிகளும் ஊடகங்களும் இப்பொழுது கண்ணை மூடிக் கொண்டிருப்பதைக் காண்கிறோம் ஆனால், இந்தப் பிரச்சினையைப் பற்றிய மெய்யான கரிசனை இருக்குமானால், இதை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைமை ஒரு முக்கியமான விடயமாகக் கருதியிருக்க வேண்டும்.

ஆனால், ஒரு போதும் இப்படி நடக்காது என்று சனங்களுக்கு நன்றாகவே தெரியும். அதனால்தான் இந்தப் புலுடாக்கதைகளை விட்டு விட்டுச் சனங்கள் தங்களால் முடிந்தளவுக்குப் போராட்டத்தை முன்னெடுத்து வருகிறார்கள். அவர்கள் இதிலே சில வெற்றிகளையும் பெற்றுள்ளனர். ஏனைய இடங்களையும் சனங்களே விடுவிப்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், ஒரு காலம் இந்தப் பிரச்சினையை படையினரின் வசமுள்ள காணிகளைப் பற்றி வாய் நுரைக்க நுரைக்கப்பேசிய தலைமைகளும் தரப்புகளும் ஊடகங்களும் இப்பொழுது "கள்ள மௌனம்" கொண்டிருக்கின்றன. பதிலாக உள்ளூராட்சி சபைத்தேர்தலில் களமிறக்கப்பட்ட சின்னங்களைப் பற்றியே கதையளந்து கொண்டிருக்கின்றன. இது பச்சையான அநீதியன்றி வேறில்லையே!

இவற்றைப்போலத்தான் அரசியற் கைதிகளின் விவகாரம், தாயகம், தேசியம், தன்னாட்சியுரிமை உள்ளிட்ட பல விடயங்கள் இன்று பேசாப்பொருளாகியுள்ளன. பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் எல்லாம் தீர்ந்து விட்டனவா? தீர்க்கப்பட்டனவா? அல்லது மாற்றுத் திறனாளிகளுக்குரிய மறுவாழ்வு கிடைத்து விட்டதா? போராளிகளாகச் செயற்பட்டவர்களுடைய வாழ்க்கைக்கும் பாதுகாப்புக்கும் உரிய உத்தரவாதம் வழங்கப்பட்டதா? ஆதரவற்ற சிறார்களுடைய எதிர்காலம் உரிய முறையில் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறதா? எதுவுமே நடக்கவில்லை.

ஆனால், எல்லாவற்றையும் தந்திரமாகத் தமிழ்ச்சமூகம் கடந்து சென்று கொண்டிருக்கிறது. இப்பொழுது அதனுடைய மூளைக்குள் நிரம்பிக் கிடப்பது உள்ளூராட்சித் தேர்தலே. இந்தத் தேர்தலில் கூட்டமைப்பினுள்ளே நடந்த குத்து வெட்டுகள் உலகறிந்தவை. சந்தி சிரித்தவை. இதைப்போலவே தமிழ் மக்கள் பேரவை, தமிழ்த்தேசிய மக்கள் முன்னிணி மாற்றுத் தலைமைகளை மாற்று அணிகளை உருவாக்குவோம் என்று சொன்ன தரப்புகள் எல்லாம் நடந்து கொண்ட விதங்கள் தலைகுனிவுக்குரியவை.

இதையெல்லாம் கண்ட மக்கள்தான் வரவுள்ள தேர்தலில் வாக்களிக்கப்போகிறார்கள். யாருக்கு வாக்களிக்கப்போகிறார்கள்? எதற்கு வாக்களிக்கப்போகிறார்கள்? இன்னும் "பொய் அரசியலைச் செய்வோரையே" ஆதரிக்கப்போகிறார்களா? சனங்களையே (தங்களையே) ஏமாற்றுவோரைப் பலப்படுத்தப்போகிறார்களா? அல்லது புதிய வழிகளைக் காணப்போகிறார்களா? மாற்றுத் தேர்வுகளைச் செய்யப்போகிறார்களா? இந்த அரசியற் தரப்புகளுக்குப் படிப்பினையைக் கொடுக்கப்போகிறார்களா? "மக்கள் சக்தி மகேசன் சக்தி, மகத்தான சக்தி" என்று சொல்லப்படுவதுண்டு. அதை மக்கள்தான் உணர வேண்டும்.

-ஆசிரியர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்திசூடி விளக்கம்!...




## நிலையில் பிரியேல்...

மேலானவர்கள் என்று நாம் யாரைக் கூறுகிறோம்? கல்வி அறிவில் சிறந்தவர்களை, இல்லையா?..அதிகம் கற்ற அறிவாளிகள் மேலானவர்கள். அதேபோல கல்வி கற்காத மூடர்கள் கீழானவர்கள். கல்வி அறிவு இல்லாத மூடன் ஒருவன், கற்றவர் கூட்டத்தோடு சேர்ந்து இருந்தானானால், அறிவாளிகளான மேலானவர்களைப் பாராட்டி மரியாதை செலுத்தும் மக்கள் இந்த அறிவில்லாத கீழோனையும் மதிக்கிறார்கள். ஏன்?..அவன் அறிவாளிகளோடு சேர்ந்து இருப்பதனால். அவன் கற்றவர் கூட்டத்தை விட்டுவிலகி கல்வி அறிவில்லாத தாழ்ந்தவர்களோடு சேர்ந்தானானால் என்ன ஆகும்?.. அவனை மக்கள் அவமதிப்பார்கள். லட்சியமே செய்யமாட்டார்கள். ஆகவே நீ இருக்கின்ற உயர்ந்த நிலையிலிருந்து ஒரு போதும் நீங்காதே என்கிறார் ஔவைப்பாட்டி.

## நீர் விளையாடேல்...

ஆடிப்பெருக்கு என்றால் என்ன?..ஆனி ஆடி மாதங்களில் ஆறுகளில் தண்ணீர் இரு கரைகளையும் தொட்டுக்கொண்டு வெள்ளமாகப் பெருகி ஓடும். இப்பெரு வெள்ளத்தில் குதித்து நீந்தி, சாகசம் புரிந்து காட்டுவார்கள் சிலர். வல்லவர்களுக்கு அது விளையாட்டு. வெள்ளப்பெருக்கில் சுழல்கள் உண்டு. அதில் சிக்கினால் மீண்டு வருவது அரிது. நீச்சலில் வல்லவனையும் சில வேளைகளில் இச்சுழல்கள் ஏமாற்றிவிடும். உயிரைப் பலி கொள்ளும் வெள்ளத்தில் குதித்து விளையாடக்கூடாது. கரையோரங்களில் ஆழமில்லாத பகுதிகளில் மூழ்கிக் குளிப்பதே முறை. அவனைப் போல நானும் நீந்துகிறேன். என்று முயற்சிக்கும் அசட்டுத் துணிச்சல்காரர்களை ஔவைப்பாட்டி எச்சரிக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொன்றைவேந்தன்... (தொடர்ச்சி)

### 61-பிறன்மனை புகாமை அறம் எனத் தகும்

பிறன்-காமத்தால் மதிகெட்டு அயலாருடைய, மனைபுகாமை-வீட்டிற்குள் செல்லாதிருத்தலே அறம் எனத்தகும். செய்யத்தக்க தருமம் எனப்படும். உயர்ந்த தருமம் என்பது எது என்றால் பிறர் மனையிலே புகுந்து அவர் மனைவியைக் கெடுத்து வாழாதிருப்பதே..

### 62-பீரம் பேணில் பாரம் தாங்கும்

பீரம் பேணில்-தாய்ப்பாலை நன்றாக ஊட்டி வளர்த்தால், பாரம் தாங்கும்-அந்தக்குழந்தையானது பிற்கால வாழ்கையில் ஏற்படும் பல பொறுப்புக்களையும் நன்றாக நிர்வகிக்கும் பலம் பெறுவர். தாய்ப்பால் உண்டு வளர்ந்தவன் எப்பேர்ப்பட்டதுமான பாரத்தையும் ஏற்று வருத்தமின்றி முடிப்பான்.

### 63-புலையும் கொலையும் களவும் தவிர்

புலையும்-புலால் உண்ணுவதையும், கொலையும்-உயர்க்கொலை செய்வதையும், களவும்-திருடுவதையும் தவிர். செய்யாது ஒழித்துவிடு. புலால் உண்பதையும், கொலையையும், திருடுவதையும் நீ செய்யாது ஒழித்துவிடு.

### 64-பெரியோர்க்கு இல்லை சீரிய ஒழுக்கம்

சீரிய ஒழக்கம் - சிறந்த ஒழுக்கம் என்பது, பெரியோர்க்கு - கீழ் மக்களிடம் இல்லை. இருப்பதில்லை. சிறந்த ஒழுங்கம் என்பதைக் கீழ் மக்களிடம் உண்டாதல் முடியாது.

### 65-பெற்றோர்க்கு இல்லை சுற்றமும் சினமும்.

சுற்றமும் சினமும் - உறவினர் என்ற பற்றும் கோபமும், பெற்றோர்க்கு இல்லை. ஞானம் வரப்பெற்றோர்க்கு இல்லை. மெய்ஞ்ஞானம் அடையப் பெற்றோர்க்குச் சுற்றம் என்ற ஆசையோ வெறுப்புமோ இல்லையாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறை!......

ஒரு கிராமத்தில் ஏழை விவசாயி ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் தன் வீட்டுத் தேவைக்காகத் தினமும் ஆற்றிலிருந்து தண்ணீர் எடுத்து வருவதை வழக்கமாகக் கொண்டிருந்தான். தண்ணீர் எடுத்து வருவதற்கென அவன் இரண்டு பானைகளை வைத்திருந்தான். அந்த பானைகள் ஒரு நீழமான கழியின் இரண்டு முனைகளிலும் தொங்கவிட்டு, கழியைத் தோளில் சுமந்து செல்வான். இரண்டு பானைகளில் ஒரு பானையில் சிறிய ஓட்டை இருந்தது. அதனால் ஒவ்வொரு நாளும் வீட்டுக்குத் தண்ணீர் கொண்டு வரும்போது, ஓட்டையுள்ள பானையில் பாதியளவு தண்ணீரே இருக்கும். குறையில்லாத பானைக்குத் தன் திறன் பற்றிப் பெருமையாக இருந்தது. அது குறையுள்ள பானையைப் பார்த்து, எப்பொழதும் அதன்குறையைக் கிண்டலும் கேலியும் செய்யும். பொறுத்துக்கொள்ள முடியாத ஓட்டைப்பானை அதன் எஜமானைப் பார்த்து ஐயா!...என் குறையைப் பார்த்து நான் மிகவும் வேதனைப்படுகின்றேன், உங்களுக்கும் எனது குறையால் வரும் வழியெல்லாம் தண்ணீர் சிந்தி உங்கள் வேலைப்பளு மேலும் அதிகரிக்கின்றது என்றது.

"என் குறையைத் தயவு செய்து சரி செய்யுங்கள்" என்றுகூறி அழுதது. அதற்கு விவசாயி "பானையே நாம் வரும் வழியில் உன் பக்கம் இருக்கும் அழகான பூஞ்செடிகளைக் கவனித்தாயா"?...உன்னிடமிருந்து நீர் சிந்துவது எனக்குத் தெரியும். அதனால் நான் வழிநெடுகிலும் பூச்செடிகொடிகளின் விதைகளை விதைத்து வைத்தேன். நீ தினமும் சிந்திய தண்ணீரால் அவை இன்று பெரிதாகவும் மக்களுக்குப் பயனுள்ளதாகவும் வளர்ந்து நறுமணம் வீசும் பூக்களை அளிக்கின்றன. அவற்றை வைத்து நான் இந்த ஊரையும் எனது வீட்டையும் அலங்கரிக்கின்றேன் என்றார். இதைக் கேட்ட பானை கவலைப் படுவதை நிறுத்தி விட்டது. அடுத்தவர் பேச்சைப் பற்றிக் கவலைப்படாத அந்த விவசாயி தன் கடமையைத் தொடர்ந்தான். ஆகவே சிறுவர்களாகிய நாமும் தேவையற்ற பேச்சுக்களுக்கு இடங்கொடுக்காமல் நல்ல விடையங்களைக் காலம் தாழ்த்தாமல் செய்வோமானால் அதுவே நன்மைபயக்கும் என்பதைப் புரிந்துகொள்வோமாக.....

செல்வி.இ.கீர்த்தனா
ரூத் மிஷன்-கிளிநொச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பின் மதிப்பு!......

குணசீலன் என்ற அரசன் ஒருவன் நோய்வாய்பட்டு பல நாட்களாகப் படுத்த படுக்கையாகக் கிடந்தான். அவனைப் பார்க்கத் தினமும் பல பிரமுகர்கள் வந்துகொண்டிருந்தனர். ஒருநாள் சில பெரியோர்கள் பலவித பழங்களைக் கொண்டுவந்து மன்னனிடம் கொடுத்துப் பேசிக்கொண்டிருந்தனர். அப்போது ஒரு விவசாயி தன்னைத் தடுத்த காவலாளியையும் மீறி மன்னனின் படுக்கையறைக்குள் வந்து நின்றான். அவனது கலைந்த தலைமுடியும் ஆடையில் பதிந்திருந்த அழுக்குகளும் அவன் தனது கிராமத்திலிருந்து வெகுதூரம் நடந்து வந்திருக்கிறான் என்பதை அறிவித்தது.

அவன் மன்னனிடம் அரசே!...உங்கள் உடல் தேறவேண்டும். எங்கள் ஊர் மாரியம்மனுக்குப் பொங்கல் படைத்தேன். அந்தப் பிரசாதத்தைக் கொண்டு வந்திருக்கிறேன் ஏற்றுக்கொள்ளுங்கள். அம்மன் பிரசாதத்தைச் சாப்பிட்டால் எந்த நோயும் பறந்து ஓடிவிடும். என்றான். அவன் பிரசாதத்தை வெளியே எடுத்தபோது அது கெட்டுப்போன நாற்றம் அடித்தது. அங்கு இருந்த பிரமுகர்கள் மூக்கைப் பொத்திக் கொண்டார்கள். முகம் சுளித்தார்கள். அரசனோ பிரசாதத்தைப் பெற்றுக்கொண்டு, தனது கழுத்திலிருந்த முத்து மாலையைக் கழற்றி எடுத்து அந்த விவசாயிக்குப் பரிசாக அளித்து அனுப்பினான்.

இதைப் பார்த்துக்கொண்டிருந்த மன்னனுக்கு வேண்டிய பிரமுகர் ஒருவர் அரசே!... கெட்டுப்போன பொங்கலுக்கா முத்துமாலை பரிசு"?... என்று கேட்டார். மன்னனோ அது கெட்டிருந்தாலும் அந்தப் பிரசாதத்தை நான் சாப்பிட்டுக் குணமடையவேண்டும் என்று விரும்பிக் கள்ளங்கபடமற்ற மனதுடன் தனது கிராமத்திலிருந்து சிலநாட்களாக நடந்தே வந்திருக்கிறான் அவனது அன்பு உண்மையானது. போலித்தனம் இல்லாதது. உண்மையான அன்பிற்கு மதிப்பு மிக அதிகமானது. நான் கொடுத்த முத்துமாலைகூட அவனது அன்புக்கு ஈடாகாது என்று கூறினான். ஆகவே நாம் செலுத்தும் அன்பானது உண்மையாக இருந்தால் கடவுளே கையைக்கட்டிக்கொண்டு நமக்குச் சேவைபுரிய வந்து நிற்பார் மாணவமணிகளே!...

செல்வி திலக்சனா இலங்கேஸ்வரன்
ரூத் மிஷன்-கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிஞரின் பிரிவு

கவித்தோழாவே!.

மெல்லமாய் சில்லென எம்மனதை
கொள்ளை கொண்டு எம் உளக்
கதவுகளை மெல்ல
வருடிவிடும்கள்வன்
எம் உள்ளம் வருடிய கள்வனே
எங்கே சென்றாய்
விழிகள் நனைகின்றது
வேர்தந்த வினைத்திறன் மிக்க
விருந்தாளியே விரைந்து வா
வேகமாய்
உன்கவித் தேன் சுவையால்
சோகங்கள் தீரும்
மெல்ல மெல்ல மெல்லினம் சாயும்
நோய்க்கு மருந்தாகும்
எம் கவிஞனே
நொடிப் பொழுதில்
மின்னல் போல் மறைந்தாய்
கவிஞனே!..அன்று நீ தந்த
கவியெனும் புயல் மழைத்துளிகள்
இன்று நாம் நனையும்
மழை வெள்ளம்
உம் கவிக்கு உருகிடும் உள்ளம்
வெம்பி மடிந்து தலை சாய்ந்தது
உன் மறைவைக் கண்ட பின்
கவிஞனே நீ
மறைந்து போகவில்லை
எம் மனங்களில் இடம்பிடித்து
எமக்கு ஒளி காட்டியாகவும்
வழிகாட்டியாகவும் உள்ளாய்!...

செல்வி.இ.துர்க்கா
இந்து அன்பகம் சிறுவர் இல்லம்
வவுனியா.

# நம்நாடு

நீர் வளமும் நில வளமும்
ஒருங்கே சேர்
நெல்வளமும் மணிவளமும்
நித்திலம் கொளிக்கும்

மூவினமக்களும் முதன்மையாய்
விளங்கிட வாணிபம் முதல்
கலாச்சாரம் வரை
கல்வி தொழிலும் சிறந்திட

அயல்நாடு போனாலும்
அசையாது எம் நாட்டுச் சிறப்பு
அழகான அருவிகள்
அகழ அகழ இரத்தினங்கள்

வடக்கே அலைகடலும்
கிழக்கே தொடு கடலும்
மேற்கே வாணிபமும்
தெற்கே இந்து சமுத்திரமும்

அழகிய குடையின் கீழ்
அற்புதமாய் குடி கொண்டொம்
எம் தாய் நாட்டின் வாசலில்
நம் நாடே நனி சிறந்ததே!...

செல்வி சர்மிகா பிறைசீலன்
இந்து அன்பகம் சிறுவர் இல்லம்
வவுனியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழின் பெருமை!...

கல் தோன்றா மண் தோன்றா காலத்துக்கு முன் தோன்றிய மூத்த தமிழே என் ஆத்தை மொழிகள் தவழ்ந்தாலும் வித்தகம் புரியும் செம்மொழியே. பல்வகை பாடிய பாவேந்தன் பேனா முனையிலும், கம்பனின் காவியத்திலும் தரமுயர்ந்து நின்று தரணியே போற்றும் மொழி இது. வாள் கொண்டு போர் கண்ட வீர வன்னியர் கதைகளில் களமாடிய பெருமொழி. சோழக்கொடியை மீளேற்றிய ஈழ மறவர்களின் வீரச்சாசனமதிலே விதைக்கப்பட்ட மொழி. உலகப் பொதுமறையாம் திருக்குறளை உலகிற்கு ஒப்புவித்த பெருமகனார் திருவள்ளுவனைத் தந்து வானுயரப் பெருமை கொண்ட மொழி.

கலை பண்பாடு பாரம்பரியமென கட்டுக்கோப்பு கலந்தமைந்து காத்திரமாய் வளர்ந்த மொழியை தொலைக்கவிடுவது துரதிஸ்டச் செயலல்லவா?.. ஈபிள் கோபுரமென்ன, நாசா பீடமென்ன, தாஜ்மகால் கற்களென்ன அதன் கட்டடமென்ன அத்தனை விந்தைகளுக்கும் அப்பாற்பட்டதம்மா எம் தமிழன் கட்டிய தஞ்சைப் பெருங்கோவில். இராஜ இராஜ சோழனின் பிரதாபமாக வியந்து நிற்கிறதே தஞ்சை மாநகரில் கோபுரம். அதைப் போற்ற ஆளில்லை இன்று. அக்கோயில் கட்டிய மன்னனுக்கோ அலங்கார கல்லறைகூட இல்லையே!...

"வேடிகனை மனிதரைப்போல வீழ்வேனென்று நினைத்தாயோ" என்ற முண்டாசுக் கவிஞன் பாராதியின் இறுதிச் சடங்கிலே எத்தனைபேர் இருந்தார்கள் தெரியுமா?...அன்றே தொலைப்புக்கள் ஆரம்பமானது. தமிழின் இருப்புடன் இன்றுமிங்கு வேடிக்கை மனிதராய்தான் எம் வாழ்க்கை போதிங்கே. மருவத்திலே மூத்த மொழி எமதே. காட்டு இலைகள், பட்டைகள், வேர்கள் முதல் அனைத்தின் பயனுமறிந்து ஆயுள்வேதம் எனும் மருத்துவ முறைகள் கண்டறிந்த மொழியே தமிழ். இன்றும் திருக்குறள் எத்தனையோ மொழிகளிலே மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அதனாலே உலகப் பொதுமறை எனத் திருக்குறளும் பொய்யாமொழிப் புலவன் என வள்ளுவனும் போற்றப்படுகின்றார். மற்றைய மொழிகள் கற்றாலும் எம் மொழியை மறக்காதிருப்பதே பெரிய பெருமை. வாழ்க தமிழ். வாழும் தமிழ் வன்மைத் தமிழ் வீழாது ஒருபோதும்!...

செல்வி சௌமியா நாகராசா
தமிழ்மொழிச்சேவை பாடசாலை-எசன்-யேர்மனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்திக்கச் சில நொடிகள்!....

1-ஜானியின் தாயாருக்கு மூன்று குழந்தைகள் மூத்தவன் பெயர் ஏப்ரல். இளையவன் பெயர் மே. மூன்றாவது குழந்தையின் பெயர் என்ன?.
--ஜீன் அல்ல ஜானிதான்.

2-எவெரெஸ்ட் சிகரம் கண்டுபிடிப்பதற்கு முன்னர் உலகின் உயர்ந்த சிகரம் எது.
--எவெரெஸ்ட்தான். அதை யாரும் கண்டுபிடிக்கவில்லை. அது ஏற்கனவே இருந்தது.

3-இரண்டு, மூன்று, நான்கடிக் குழிகளில் எவ்வளவு மண் இருக்கும்.
--குழியில் மண் எதுவும் இருக்காது. இருந்த மண் எடுக்கப்பட்டதால்தான் குழியானது.

4-ஒரு ஓட்டப் பந்தயத்தில் இரண்டாவதாக வருபவனை நீ முந்தினால் நீ எந்த இடத்தில் இருப்பாய்.
--இரண்டாவது இடத்தில் இரண்டாமவனை முந்தித்தான் அந்த இடத்திற்கு வந்தாய்.

5-ஒரு குடியானவனுக்கு ஒரு தளத்தில் மூன்று வைக்கோல் போர்களும் இன்னொரு தளத்தில் ஐந்து வைக்கோல் போர்களும் இருக்கின்றன அவன் அவற்றை இன்னொரு தளத்தில் சேர்த்து வைத்தால் எத்தனை வைக்கோல் போர்கள் இருக்கும்.
--ஒரே ஒரு வைக்கோல் போர்தான் இருக்கும். முதலாவது இரண்டாவது தளத்தில் இருந்த வைக்கோலை மூன்றாவது தளத்தில் சேர்த்து ஒரு வைக்கோல் போராக வைப்பான்.

செல்வி நிவேதா யதீஸ்குமார்
ரூத் மிஷன்-கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடுக்கோ புதிர்ப்போட்டி இலக்கம் - 4

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | 4 | | | 1 |
| | | | 7 | 6 | | | | |
| | 6 | 9 | 2 | 1 | | 7 | | |
| | 3 | 6 | | | | 4 | | |
| | | | | | | | 8 | |
| 5 | 2 | | | | | | | |
| | | | 9 | | 5 | 8 | | |
| 3 | | | 1 | 2 | | | | |
| | | | | 7 | | 9 | 3 | |

# சிறுவர் குறுக்கெழுத்துப் போட்டி 93

## (புரட்டாதி--ஐப்பசி-2016)

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இ – வ:

01-04 இவர்களுக்கும் உலகில் ஒருநாள் கொண்டாடப்படுகின்றது

10-11 இது அழிவதால் பூமியில் மழை குறைவடைகின்றது

வ – இ:

08-05 மாணவர்கள் படித்து இது பெறவேண்டும்

15-14 இசைக்கருவிகளில் ஒன்று

கீ – மே:

16-04 கவிச்சக்கரவர்த்தி இவர்

15-11 இல்லம் ஒத்த சொல்

மே – கீ:

03-11 இனிப்பான பலகாரம் ஒன்று

13-05 சுவைகளில் ஒன்று

(விடைகள் இன்னொரு பக்கத்தில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெற்றோரின் கவனத்திற்கு...

குழந்தைகள் பொதுவாகவே பெற்றோர்களுக்கு தங்கள் பிள்ளை வகுப்பில் முதல் மாணவனாக வரவேண்டும், தனித்துவம் வாய்ந்தவனாக இருக்க வேண்டும் என்பதுவே ஆசை. இதற்காக எப்போதும் படி, படி என்று சொல்லிக் கொண்டே இருக்க கூடாது, அது அவர்களுக்கு வெறுப்பை மட்டுமே ஏற்படுத்தும். இதற்கு பதிலாக அன்புடன் அரவணைத்து சொல்லிக் கொடுப்பது அவசியம்.

ஒவ்வொரு நாளும் எந்தெந்தப் பாடங்களை படிக்க வேண்டும் என பட்டியலிட்டு, அதற்கேற்றாற் போல் அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும். பிள்ளைகளை படிக்கச் சொல்லிவிட்டு, நீங்கள் தொலைக்காட்சி பார்க்கக் கூடாது, அப்படி செய்தால் அவர்களுக்கு எதிர்மறையான எண்ணமே ஏற்படும்.

ஒருவேளை சரியாக படிக்கவில்லை என்றால் அதற்காக அவர்களை அடிக்கக்கூடாது, மதிப்பெண் குறைந்ததற்கு என்ன காரணம் என அலசிக் காரணத்தை கண்டறிந்து அதனைச் சரிசெய்ய வேண்டும்.பெற்றோர்கள் பிள்ளைகளின் ஆசிரியரை அடிக்கடி சந்திக்க வேண்டும், வகுப்பில் பாடங்களை கவனிக்கிறாரா? மற்ற பிள்ளைகளுடன் எப்படி பழகுகின்றார்? என தெரிந்து கொள்ள வேண்டும்.

அவ்வப்போது ஓய்வு நேரங்களில் விளையாட அனுமதிக்கலாம்,வார இறுதிநாட்களில் பெற்றோர் ஜாலியாக பிக்னிக் கூட்டி செல்லலாம், இப்படி செய்தால் பிள்ளைகளுக்கு உங்களின் மீதான பாசம் அதிகரிக்கும். உங்கள் பிள்ளைகளுடன் ஒரு நண்பனைப் போன்று நீங்கள் பழகினாலே போதும், உங்கள் எண்ணம் போன்று அவனை சிறந்த மாணவனாக சமூகத்தில் பெரிய ஆளாக உருவாக்கலாம்!!!

-------------------------------

| கல்வி!... | ஆசிரியர்!... |
|---|---|
| அறியாமையை அகற்றி<br>மனங்களைச் செதுக்கி<br>மனிதனை மனிதனாக்குவது<br>அழிவற்ற கல்விச் செல்வம்!... | உண்மையை ஊட்டி<br>பொய்மையை அகற்றி<br>நன்மையே செய் என<br>வழி காட்டுபவர் ஆசிரியர்!... |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தகவல்கள்!......

## உயிரினங்கள்:-

1-கோழி முட்டையின் நடுவிலுள்ள கருவில் காணப்படும் திருகிய இழைகளின் பெயர் - சலாசா.
2-புறாவின் விலங்கியல் பெயர் - கொலம்பியா லிவியா.
3-பறவை இனங்களில் ஆந்தையின் முட்டைதான் உருண்டை வடிவில் இருக்கும்.
4-முதலையின் அடி வயிற்றுப்பகுதித் தோலிலிருந்து புல்லட் புரூவ் உடை தயாரிக்கப்படுகின்றது.
5-காகம் இல்லாத நாடு - நியூசிலாந்து.
6-உலகில் கழுதைகள் புகலிடமாகவுள்ள மாநிலம் - இந்தியா-குஜராத்.

## பொது:-

1-இலங்கையில் முதன் முதலாக உற்பத்தி செய்யப்பட்டு 2003 நவம்பரில் மோட்டார் வாகன ஆணையாளர் திணைக்களத்தினால் பதிவாகி விற்பனைக்கு வந்த கார் "மைக்கரோ" கார் ஆகும்.
2-இரவு நேரங்களில் ஒட்சிசனை வெளிப்படுத்தும் தாவரங்கள் துளசி, அரசமரம்.
3-உலகில் அதிக எண்ணிக்கையில் இஸ்லாம் மக்கள் வாழும் நாடு இந்தோனிசியா.
4-நம்நாட்டில் மூலிகை மரங்கள் என்று அழைக்கப்படும் மரங்கள்.. வேம்பு, நாவல், இலுப்பை, முருங்கை போன்றவை முக்கியமானவையாகும்.
5-உலகிலே அதிகூடிய நாடுகளை ஆட்சி செய்த, செய்துவரும் நாடாகப் பிரித்தானியா விளங்குகின்றது.
6-உலகக்கிண்ண காற்பந்துப் போட்டிகள் இவ்வருடம் யூன், யூலை மாதங்களில் ரஷ்ஷியாவில் நடைபெறவுள்ளது.

செல்வி.ச.சானியா
யாழ் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுகதைகள்!.....

01-குண்டு முழி ராசாவிற்கு இடமெல்லாம் பல் அது என்ன?.

02-ஊசி நுழையாத கிணற்றில் ஒரு ஆழாக்குத் தண்ணீர் அது என்ன?.

03-உயரப் பறக்கும் ஊன்றுகோலில் நிற்கும் அது என்ன?..

04-நடைக்கும் உவமை, நளனின் தூதுவன் அது என்ன?..

05-மூடிய அரங்குக்கள் முத்துப் பிறந்தான் முரட்டுச் சிப்பாய் அது என்ன?..

06-திரவமாகப் பிறந்தான் புகையாய் மறைந்தான் அது என்ன?.

07-இருட்டு வீட்டில் முரட்டுச் சிப்பாய் அது என்ன?..

08-பகலில் துயிலுவான் இரவில் அலறுவான் அது என்ன?..

09-பாடத் தெரிந்தவனுக்கு ஆடத்தெரியாது. ஆடத்தெரிந்தவனுக்குப் பாடத் தெரியாது அவை என்ன?..

10-பதுக்கி வைத்த முத்துக்கள் எங்கே?..பவளவாய் திறந்து பார்ப்போமே அது என்ன?..

11-உச்சியிலே கிரீடம் உடம்பெல்லாம் கண் அது என்ன?..

12-எப்போதும் கிடைக்காத மதி. எல்லோரும் விரும்பும் மதி அது என்ன?..

13-இரவெல்லாம் பூக்காடு பகலெல்லாம் வெறுங்காடு அது என்ன?..

14-உச்சிக் குடுமிக்காரன் கொள்ளி வைச்சா வெடிப்பான் அது என்ன?..

15-பெட்டியைத் திறந்தால் கிருஷ்ணன் பிறப்பான் அது என்ன?..

விடைகள்:-

01-மாதுளம்பழம் 02-இளநீர் 03-கொடி 04-அன்னப்பறவை 05-வாய்-பற்கள்
06-பெட்ரோல் 07-பூட்டு 08-ஆந்தை 09-குயில்-மயில் 10-பற்கள்
11-அன்னாசிப்பழம்12-நிம்மதி 13-வானம் 14-பட்டாசு 15-வேர்க்கடலை

செல்வி தர்ஷிகா கண்ணன்
ரூத் மிஷன்-கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரயாண சாதனங்கள்!...

மனித வாழ்வில் நாம் அன்றாடம் பல இடங்களுக்குச் சென்று வருகின்றோம். மிக..மிக ஆரம்ப காலங்களில் மனிதன் நடந்து திரிந்தே பல காரியங்களைச் செய்திருக்கிறான். கால ஓட்டத்தில் விஞ்ஞான வளர்ச்சி, கண்டுபிடிப்புக்கள், ஆராய்ச்சிகளின் அபரித வளர்ச்சியால் மனிதன் தனது வேலைகளை இலகுவாக்கிக் கொள்ள பலதரப்பட்ட வாகனங்களைக் கண்டுபிடித்தான். அறிவியலின் வளர்ச்சி, ஆற்றலின் முகிழ்ச்சி, விவேகத்தின் நெகிழ்ச்சி என எழுந்து வளர்ச்சியுற்றதால் மனிதன் தனது பாவனைக்கெனப் பல வாகனங்களைக் கண்டுபிடித்தான். இவற்றில் தொண்ணூறு வீதமான வாகனங்களின் பெயர்களை நாம் ஆங்கிலத்திலேயே பாவிக்கக் கற்றுக்கொண்டுவிட்டோம் என்பது உண்மையாகும். ஆகவே அவற்றிற்குரிய தமிழ்ப் பதங்களைப் பார்ப்போம்....

| | | |
|---|---|---|
| பஸ் | Bus | பேரூந்து |
| கார் | Car | மகிழுந்து |
| ரைக்ஸி | Taxi | வாடகி |
| எக்ஸ்பிரஸ் ரைக்ஸி | Taxi Express | விரைவு வாடகி |
| மோட்டார் சைக்கிள் | Motor Cycle | இன்னுந்து, உந்துருளி |
| பைக்கிள் | Cycle | மிதிவண்டி, ஈருருளி |
| ஜீப் | Jeep | வல்லுந்து |
| வேன் | Van | மூடுந்து |
| லொறி | Lorry | சுமையூர்ந்து, பாரஊர்ந்து |
| ரிரக் | Truck | சரக்கூந்து |
| ரெயின் | Train | தொடரூந்து, தொடர்வண்டி |
| மினிபஸ் | Mini Bus | சிற்றுந்து |
| பிளேன் | Plane | வானூர்த்தி, ஆகாயவிமானம் |
| கெலிகொப்டர் | Holicopter | உலங்குவானூர்த்தி, திரிகை |
| மோட்டார்போட் | Motor Boat | விசைப்படகு |
| ஸிப், போட் | Chip Boat | கப்பல் |
| ரிராம் | Tram | இழுவண்டி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறளும் பொருளும்

இன்னாசெய்யாமை: –

311. சிறப்பீனும் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள்.

312. கறுத்தின்னா செய்தவக் கண்ணு மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள்.

313. செய்யாமல் செற்றார்க்கு மின்னாத செய்தபி
னுய்யா விழுமந் தரும்.

314. இன்னாசெய் தாரை யொறுத்த லவர்நாண
நன்னயம் செய்து விடல்.

315. அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை.

316. இன்னா வெனத்தா னுணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கட் செயல்.

317. எனைத்தானு மெஞ்ஞான்றும் யார்க்கு மனத்தானா
மாணாசெய் யாமை தலை.

318. தன்னுயிர்க் கின்னாமை தானறிவா னென்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல்.

319. பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா
பிற்பகற் றாமே வரும்.

320. நோயெல்லா நோய்செய்தார் மேலவா நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறளும் பொருளும் (பிறருக்குக் கேடு செய்யக்கூடாது)

311 சிறப்பைத் தருகின்ற செல்வத்தைப் பெறுவதாயிருந்தாலும் பிறருக்குத் துன்பம் தரும் செயலைச் செய்யாதிருப்பதே குற்றமற்றவர்களின் கொள்கை ஆகும்.

312. ஒருவர் கோபித்துத் தனக்குத் துன்பத்தைச் செய்தாலும் அவருக்குத் திரும்பக் கேடு செய்யாது இருப்பதே குற்றமற்றவரின் கொள்கையாகும்.

313. ஒருவனுக்குத் தான் ஒரு தீங்கும் செய்யாதிருக்கத் தன்மேல் பகை கொண்டு அவன் தீங்கு செய்தால் அது நீங்கமுடியாத துன்பத்தை அவனுக்குத் தரும்.

314. தமக்குத் துன்பம் செய்தவரைத் தண்டித்தல், அவர் வெட்கப்படும்படியான நன்மையை அவருக்குச் செய்துவிட வேண்டும்.

315. பிறிதோர் உயருக்கு வரும் துன்பத்தைத் தன் உயிருக்கு வந்தது போல நினைக்காவிட்டால் அறிவினால் ஆகும் பயன் உண்டோ.

316. மக்களுக்கு இது தீமை என்று தான் மனத்தால் அறிந்ததைப் பிறரிடம் செய்யாமல் தவிர்க்க வேண்டும்.

317. எக்காலத்திலும் யாருக்கும் சிறிதளவும் துன்பம் செய்வதை மனதினாலும் நினைக்காது இருப்பது மிகவும் நல்லது.

318. பிறர் செய்யும் தீங்கு தனக்குத் துன்பம் தருவதை அறிந்தவன் மற்ற உயிர்களுக்குத் துன்பம் செய்வது எதனால்.

319. முற்பகலில் நாம் ஒருவனுக்கு ஒரு துன்பத்தைச் செய்தால் அக்கேடு பிறர் செய்யாமலேயே நமக்குப் பிற்பகலில் வந்து சேரும்.

320. துன்பம் வருவது எல்லாம் மற்ற உயிருக்குத் துன்பம் செய்தவருக்கே வந்து சேரும். பிறருக்குத் துன்பம் செய்யாதவர் தமக்கு வரும் துன்பத்தைத் தடுத்துக் கொண்டவர் ஆவார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசி ஆனந்தனின் சிந்தனைகள்!...



**உயர்வு:-**

இரவின் பிடியில் அழுத்திக் கண்ணீர் விட்டது வானம். கண்ணீர் பனித்துளிகளாய் விழுந்தபோது வானத்தின் துன்பத்தை எண்ணி வருந்திய பசும்புல் கண்ணீர்த் துளிகளைத் தாங்கிக்கொண்டே வந்தது. ஒவ்வொரு நாளும் புல் ஓங்கி வளர்ந்தது. பரவி உயர்ந்து எங்கணும் பச்சைக் காடாய் நிறைந்தது பசும்புல். காலைக்குருவி பாடியது...

"ஏங்குவான் கண்ணீரைத் தாங்குவான் உயர்வான்"

**உலகம்:-**

தாமரையைக் கொத்திக் கிழித்து வீசவேண்டும் போல மீனுக்குத் தோன்றியது. குளத்துக்குத் தேன் அருந்த வந்த வண்டு மீனைப் பார்த்துக் கேட்டது "உணர்ச்சி வசப்படுகிறாயே ஏன்"?.. ஒன்றுமில்லை....காலம் முழுவதும் தன்னைத் தாங்கி நிற்கும் தண்ணீரைத் தாமரை இலை உருட்டி வெளியே தள்ளுகிறதே.. இந்தத் தாமரைக்கு மனச்சாட்சியே இல்லை பார்....வண்டு புரிந்து கொண்டது. அழுத்தமாக நெஞ்சின் அடியில் அது உச்சரித்தது.

"தாங்கும் தண்ணீரைத் தாங்காத தாமரை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூட்டுக்குப் பொக்கெட் இல்லை....

ராஜா பேருக்கு ஏற்ற பணக்காரன். பிறக்கும் போது பணக்காரக் குடும்பத்தில் ஒரே மகனாக பிறந்தான் அவனின் தகப்பன் ஜெயம் ஒரு அரசியல் வாதி. ஊழல் மூலம் சொத்துகளுக்கு அதிபதியானவன் . ஒரே வாரிசாக "போர்ன் வித் சில்வர் ஸ்பூன்" (Born with a Silver Spoon) என்பதர்க்கேற்ப செல்வச் செழிப்பில் வளர்ந்தவன் ராஜா. அவனின் பாட்டன் பெயர் செல்வம் ஊரை ஏமாற்றி பணம் செர்த்தவன். அவனின் தந்தையும் பாட்டனும் கார் விபத்தில் திடீர் என இறந்து எரிந்து போனார்கள். அவர்களின் உடலை அடையாளம் காணமுடியவில்லை.

தந்தை சென்ற வழியில் பணம் சேர்த்து கோடீஸ்வரன் என்று பெயர் வாங்கினான் ராஜா. அவனுக்கு இரண்டு சின்ன வீடுகள் . ஆறு பிள்ளைகள ராஜாவுக்கு உடல் எல்லாம் வியாதி. ஒருவருக்கும் ஒரு சதம் கொடுக்கமாட்டான். அவனுக்கு ஒரு ஆசை. தான் இறந்தால் தன் உடலை புதைக்க சந்தன மரத்தால் செய்த சவப்பெட்டி தேவை என்று. தனது . மரண வீட்டுக்கு வந்திருப்பவர்களுக்கு அந்த பெட்டியில் இருந்து சந்தன வாசனை வீச வேண்டும், பெட்டியின் விளிம்புகள் எல்லாம் தங்கத்தால் இருக்க வேண்டும் , தன் உடலை விலை உயரந்த துணியில் கோர்ட் சூட்டால் அலங்கரிக்க வேண்டும். தையல்காரனிடம் போய் தன் மனதுக்கு பிடித்த உடுப்பை பார்த்தார் ராஜா "ஸ்டைல் பிடிதுக்கொண்டது" அனால் கோர்ட்டுக்கும் சூட்டுக்கும் பொக்கட் இல்லை ராஜாவுக்கு கோபம் வந்து விட்டது"எங்கே பொக்கட்டை காணோம் டெய்லர்"? அது தேவையில்லை சேர்"நீங்கள் போகும்போது காசு ஒன்றும் கொண்டுபோகப்போவதில்லை. அதாலை பொக்கட் வைக்க இல்லை சேர்" டெய்லர் சொன்னான்..

பொன் குலேந்திரன் – கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப்போட்டி-158
## (ஆடி- ஆவணி 2017)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

**இ-வ**

01-06 தமிழர்களின் திருநாட்களில் ஒன்று.

11-14 தெரிந்தவர்களை இப்படியும் அழைப்பார்கள்.

16-18 மரக்கறி வகைகளில் ஒன்று.

30-32 கனதியானதை இப்படியும் அழைப்பார்கள்.

43-46 ஜனநாயக நாட்டில் நடைபெறுவது.

**வ-இ**

07-06 உறுப்புக்களில் ஒன்று.

11-09 வடிவங்களில் ஒன்று.

26-23 மூலிகைத் தாவரம்.

39-37 வீட்டில் ஒருவர்

42-41 சில பெண்களுக்கு இதுவே தூக்குக் கயிறாகிவிடும்.

**கீ-மே**

20-06 நீர் வாழ் உயிரினம்.

22-01 சிலர் இது எழுதுவதில் வல்லவர்கள்.

43-22 சித்திபெற்ற அறிக்கை ஒத்த சொல்.

47-40 உருவாகுவதற்கு தோன்றுவதற்கு இதுவே காரணம்.

48-41 சிலவேளைகளில் இதுவே பயிரை மேய்ந்துவிடும்.

**மே-கீ**

03-38 ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு இந்த வளம் அவசியம்.

05-40 பனை மரத்திற்கு இப்படியும் ஒரு சிறப்புப் பெயர் உண்டு.

07-35 பருவ காலங்களில் ஒன்று.

20-41 கால்பந்தாட்டத்தில் பிரபலமான நாடு.

42-49 ஆண்களில் காணப்படுவது இது.

(விடைகளை கண்டு பிடியுங்கள். முடியாவிடின். பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முக்கிய சில நிகழ்வுகள்.... (தை - மாசி மாதம்)

## இலங்கை....

01.01.1958-வாகனங்களில் சிங்களச் "சிறி" எழுத்து முதன்முதல் பொறிக்கப்பட்டது
02.01.1993-யாழ்-கிளாலி படுகொலைநாள் 50 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.
03.01.1995-சந்திரிகா அரசுடனான விடுதலைப்புலிகளின் 2ம் கட்டப் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்ட நாள்.
10.01.1974-4வது உலகத்தமிழாராய்ச்சி மகாநாடு யாழ்ப்பாணத்தில் நடை பெற்ற போது இலங்கைப் படைகளின் தாக்குதலில் 9 தமிழர்கள் பலி.
16.01.1993-கேணல் கிட்டு உட்பட 9 விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள் வங்கக் கடலில் கப்பலை வெடிக்க வைத்துத் தற்கொலை செய்த நாள்.
17.01.2001-பொங்குதமிழ் நிகழ்வு முதன்முதல் யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட்டது
23.11970- தமிழ் இளையோர் பேரவை ஆரம்பிக்கப்பட்ட நாள்.
28.01.1987-மட்டக்களப்பு-கொக்கட்டிச்சோலை நூற்றுக்கணக்கான தமிழர்கள் சிங்களப் படைகளால் படுகொலை செய்யப்பட்ட நாள்.
02.02.1998-கிளிநொச்சியை முற்றாக விடுதலைப்புலிகள் கைப்பற்றிய நாள்.
02.02.1619-போத்துக்கல் நாட்டவரான ஒலிவீரா - சங்கிலி மன்னனுடன் போர். சங்கிலியன் தோல்வி. சுதந்திர யாழ்ப்பாண அரசு போத்துக்கேயரால் கைப்பற்றப்பட்ட நாள்.
08.02.1956-சிங்களம் மட்டும் ஆட்சிமொழி என்ற சட்டம் சிங்கள ஆட்சியாளர்களால் பிரகடனப்படுத்திய நாள்.
10.02.1991-வன்னி நிலப்பரப்பில் அரசபடைகளுக்குச் சொந்தமான உலங்கு வானூர்த்தி ஒன்றை விடுதலைப் புலிகள் சுட்டுவீழ்த்திய நாள்.
14.02.1977-காங்கேசன்துறை பொலிஸ் நிலையம்மீது விடுதலைப்புலிகளின் தலைவர் தலைமையில் முதன்முதலாகத் தாக்குதல் நடாத்தப்பட்டது.
19.02.1986-அம்பாறை-உடும்பன்குளம் என்ற இடத்தில் 60 பொதுமக்களை சிங்களப்படைகள் படுகொலை செய்தநாள்.

## பிரபலங்கள்...

02.01.1782-கண்டியின் கடைசி மன்னன் கீர்த்திசிறி இராஜசிங்கன் நினைவுநாள்.
05.01.2000-மாமனிதர் குமார் பொன்னம்பலம் நினைவுநாள் (12.08.1938-05.01.200009.01.1924-சேர் பொன் அருணாசலம் நினைவுநாள் (14.09.1853-09.01.1924)
16.01.1993-விடுலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் கேணல் கிட்டு நினைவுதினம் (02.01.1960-16.01.1993)
22.01.1947-சுவாமி ஞானப்பிரகாசர் நினைவுநாள் (30.08.1875-22.01.1947)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25.01.1922-சுன்னாகம் குமாரசாமிப்புலவர் நினைவுநாள் (12.01.1855-25.01.1922)
04.02.1747-தமிழறிஞர் வீரமாமுனிவர்(கொன்ஸ்டன்டைன் ஜோசப்) இத்தாலி நாட்டவர் நினைவுதினம் (08.11.1680-04.02.1747)
05.02.1898-தமிழறிஞர் சித்திலெப்பை நினைவுதினம் (11.061838-05.02.1898)
11.02.1924-நடிகமணி வி.வி.வைரமுத்து பிறந்தநாள் (11.02.1924-08.07.1989)
22.02.1938-சுதந்திரன் பத்திரிகை ஆசிரியர் கோவை மகேசன் பிறந்தநாள் (22.02.1938-06.07.1992)

## உலகப்பிரபலங்கள்...

03.01.1740-வீரபாண்டிய கட்டப்பொம்மன் பிறந்தநாள் 03.01.1740-16.10.1799)
08.01.1642-பூமி சூரியனைச் சுற்றிவருவதாகக் கண்டறிந்த இத்தாலிய விஞ்ஞானி கலிலியோ கலிலி நினைவுநாள் (15.02.1564-08.01.1642)
09.01.1324-மார்க்கோப்போலோ நினைவுநாள் (1254-1324) 1
2.01.1863-சுவாமி விவேகானந்தர் பிறந்ததினம் (12.01.1863-08.07.1902)
13.01.0356-கிரேக்க மன்னன் மகா அலெக்ஸாண்டர் நினைவுநாள் (0323-0356)
17.01.1917-தமிழக முதலமைச்சர் எம்.ஜி.ஆர் பிறந்ததினம் (17.01.1917-24.12.1987)
15.01.1929-அமெரிக்காவில் நிறவெறிக்கு எதிராகப் போராடிய வீரன் மாட்டின் லூதர்கிங் பிறந்தநாள் (15.01.1929-04.04.1968)
21.01.1924-சோவியத்தின் சிற்பி லெனின் நினைவுநாள் (10.04.1870-21.01.1924)
24.01.1431-பிரான்ஸ் நாட்டின் தேசிய வீராங்கனை தேசபக்தை.ஜோன் ஒவ் ஆர்க் நினைவுநாள் (1412-1431)
26.01.1823-சின்னம்மை மருந்தைக் கண்டுபிடித்த சேர் எட்வேட் ஜென்னர் நினைவுநாள் (17.05.1749-26.01.1823)
29.01.0470-உலகப்புகழ் தத்துவஞானி சோக்கிரட்டீஸ் நினைவுநாள் (0400-0470)
30.01.1948-மகாத்மா காந்தி நினைவுநாள் (02.10.1869-30.01.1948)
02.02.1543-பூமி சூரியனைச்சுற்றி வலம் வருகிறது என்று கண்டறிந்த இத்தாலியரான நிக்கலஸ் கொப்பனிக்கஸ் நினைவுநாள் (1473-1543)
03.02.1969-தமிழக முதலமைச்சர் சி.என்.அண்ணாதுரை நினைவுநாள் (15.09.1909-03.02.1969)
12.02.1936-பிரபல எழுத்தாளர் சோவியத் மார்க்சிம் கார்க்கி நினைவுநாள்1868-1936)
16.02.1962-அணுவிஞ்ஞானி நோபல்பரிசு பெற்றவர் டென்மார்க் நாட்டவரான நீல்ஸ் போர் நினைவுதினம் (1885-1962)
17.02.1521-கடல்வழி உலகை வலம்வந்து பசுபிக் சமுத்திரம் என்று பெயர் சூட்டியவர் கடலோடி வேடினன் மகலென் நினைவுநாள் (1480-1521)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18.2.1907-அணுக்குண்டின் தந்தை ரோபேட் ஒப்பின் நினைவுநாள் (22.04.1904 18.02.1967)

25.02.1779-அவுஸ்திரேலியாக் கண்டத்தை கண்டறிந்தவரான பிரித்தானியர் ஜேம்ஸ் குக் நினைவுநாள் (1728-1779)

## முக்கிய நிகழ்வுகள் சில

01.01.2017-ஆங்கில புதுவருடப்பிறப்பு

01.01.2002-ஐரோப்பிய நாணயம் புழக்கத்திற்கு வந்தது.

10.01.1787-அமெரிக்காவில் முதன் முதல்டொலர் நாணயம் புழக்கத்தில் வந்தது.

11.01.1510-ஆபிரிக்க மக்கள் முதன் முதல் அடிமைகளாகக் கடல்வழியாக கரிபியன் தீவுகளுக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

12.01.1897-பாதுகாப்பான முகச்சவரக்கத்தியை அமெரிக்கரான கிங் சி கில்லட் என்பவர் கண்டறிந்தார்.

14.01.0000-தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் நாள்.

15.01.1883-அமெரிக்கரான கொல்ட் என்பவர் பிஸ்டல் (றிவோல்வர் வகைத் துப்பாக்கி) கண்டுபிடித்தார்.

20.01.1913-சினிமாத்துறை மையமான கொலிவூட் அமெரிக்காவில் தொடங்கியது

31.01.1903-அமெரிக்க ரைட் சகோதரர்களால் விமானம் கண்டுபிடிக்கப்பட்டது.

02.02.1290-வாசிக்கக்கூடிய கண்ணாடி முதன்முதல் இத்தாலியில் கண்டறியப்பட்டது.

07.02.1834-கணக்குப் பார்க்கும் இயந்திர சாதனத்தை இங்கிலாந்து நாட்டவரான சாள்ஸ் பார்வேஜ் என்பவர் முதன்முதல் கண்டறிந்தார்.

10.02.0776-உலகின் முதலாவது ஒலிம்பிக்போட்டி கிறீஸ்லாந்தில் நடைபெற்றது.

12.02.1555-புகையிலை ஐரோப்பாவிலிருந்து அமெரிக்காவிற்குக் கொண்டு செல்லப்பட்டு அறிமுகமாக்கப்பட்டது.

14.02.0000-உலகக் காதலர் தினம்.

19.02.1665-இங்கிலாந்து நாட்டவரான சேர் ஐசக் நியூட்டன் புவியீர்ப்புச் சக்தியைக் கண்டறிந்தார்.

20.02.1825-முதலாவது பயணிகள் புகையிரதம் இங்கிலாந்தில் அறிமுகமானது

23.02.1954-அமெரிக்க கான்ஸர் புற்றுநோய் மையம் முதன் முதலாக சிகரட் பிடித்தால் கான்சர் நோய் வரும் என உலகிற்கு அறிவித்தது.

25.02.1840-உலகில் முதன் முதல் தபால் முத்திரையை அறிமுகப்படுத்தியது இங்கிலாந்து. "பிளாக் பென்னி" என்ற முத்திரை விநியோகத்திற்கு வந்தது.

27.02.1848-உலகிற்கு முதன் முதல் ஜேர்மனியரான கார்ல் மாக்ஸ் கம்யூனிசக் கொள்கையை வெளியிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்நெறி.... **அன்பு!......** வீ.நந்தகுமார் - யேர்மனி

அன்பு ஆண்டவன் அருளில் ஆரம்பமாகிறது.
அன்பு அழகிய வாழ்க்கையின் அடித்தளம்.
அன்பு இணைத்துக் கொண்டு அணைத்துச் செல்லும்.
அன்பு அதிகமாகும்போது மனிதனாகின்றோம்.
அன்பு சகலதையும் தாங்கும் சகலதையும் சகிக்கும்.
அன்பு இருக்குமிடத்தில் அமைதியைக் காணலாம்.
அன்பு இதயம் அனைத்தையும் அடையும்.
அன்பு நீடிய சாந்தமும் சந்தோஷமும் நிறைந்தது.
அன்பு நிறைந்தவார்த்தைகள் ஆத்திரத்தை அடக்கும்.
அன்பு ஆணவம் அற்றது, அதிகாரம் செய்யாது.
அன்பு உள்ள இடத்தில் இன்பம் சுற்றிச்சுற்றி நிற்கும்.
அன்பு இதனிலே ஆனந்தமான வாழ்வு பிறக்கிறது.
அன்பு பழிவாங்காது, பாவம்செய்யாது, பண்புள்ளது.
அன்பு ஒரு அர்த்தமுள்ள வாழ்க்கையை அமைக்கிறது.
அன்பு உதவி செய்யும் உபத்திரவம் கொடுக்காது.
அன்பு நீதியானது, நேர்மையானது, நம்பிக்கையுள்ளது.
அன்பு கொடுப்பவரையும் வாங்குபவரையும் பிணைக்கிறது.
அன்பு பாசமுள்ளது, நேசமுள்ளது, மோசம் செய்யாது.
அன்பு இழக்கப்படும்போது அத்தனையும் இழக்கப்படுகிறது.
அன்பு செழிப்பானது, சினம் கொள்ளாது, சந்தேகமற்றது.
அன்பு நுழையும்போது இன்பம் இறுதிவரை இருக்கும்.
அன்பு கலகம் செய்யாது காலம் பூராவும் காப்பாற்றும்.
அன்பு மூர்க்கம் கொள்ளாது, மென்மையானது, மேன்மையுள்ளது.
அன்பு இதனால் அன்யோன்யமான குடும்ப வாழ்வு குதூகலம் பெறுகிறது.
அன்பு உள்ள இதயம் இளமை இழக்காது, இன்பம் பெருக்கும்.
அன்பு தன்னைப் புகழாது, தற்பெருமை கொள்ளாது, தயவுள்ளது.
அன்பு இதனால் வரும் வார்த்தைகள் அளவற்ற ஆனந்தம் தரும்.
அன்பு இரக்கமுள்ளது, இறுமாப்பாய் இராது, இனிது பேசும்.
அன்பு இதனை ஆதாரமாகக் கொண்டே அழகிய வாழ்க்கை அமைகிறது.
அன்பு இதனிலே பிறந்தாய் வளர்ந்தாய், அதன்வழியே வாழ்ந்துகொள்.
அன்பு இதை அறிந்தவர்களுக்கு ஆண்டவன் ஆசீர்வாதம் அமையும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலித்துப் பார்!....

இதயத் துடிப்பு இருமடங்காகும்
இரவுபகலும் இல்லையென்றாகும்
கனவுப் பயிரை அறுவடையாக்கும்
மனதினில் மத்தாப்பு சிதறும்

காகத்தின் நிறமும் பொன்வண்டாகும்
காசுபணமும் கடதாசியாக்கும்
பேச்சு மொழியும் மௌனமாகும்
மூச்சுக் காற்றும் காதலைச் சொல்லும்

காதலித்துப் பார் கவிமழை பொழியும்
உணர்வுப் பூக்கள் உற்பத்தியாகும்
கற்பனை சுகத்தில் காலம் நகரும்
நித்தமும் காதல் முகம் தேடியலையும்
பித்தனாக்கி சுற்றவைக்கும்
வானவெளியில் பறக்கச் சொல்லும்
கானம்பாடி களிக்கச் சொல்லும்

காற்றையும் தூதனுப்பும்
கணணியும் மந்தகதியாகும்
குறுஞ் செய்திகள் மின்னலெனப்பாயும்
படுக்கையும் முள்ளாகும்
தூக்கம் தொலைக்கும்
ஏக்கம் நிறைக்கும்
உலகமே இன்பமயமாகும்
இருவரே உலகென்றாக்கும்
மன்னாதி மன்னனாவாய்
மனதினில் சிம்மாசனமிடுவாய்
காதலித்துப் பார்
உயிரும் கூட துச்சமாக்கும்
காதலொன்றே வாழ்வெனச் சொல்லும்
கவியநாயகனாய் ஆக்கிவைக்கும்

கீத்தா பரமானந்தன்

# காதல் இது!...

படித்தவனுக்கும் காதல் வரும்
படிக்காதவனுக்கும் காதல் வரும்
மாடி வீட்டிலும் காதல் வரும்
ஏழை குடிசையிலும் காதல் வரும்
புரியாத காதல் இது
உண்மையை புரியவைத்தே
சென்று விடும்

பயித்தியம் பிடித்து
அலைய வைக்கும்
நிஜ பயித்தியமாகவும் ஆக்கி விடும்
சிலரைத்தான் வாழ வைக்கும்
பல பேரை அழ வைக்கும்
புரியாத காதல் இது
இந்த உலகையே ஆட்டி வைக்கும்
காதல் இது

கவி மீனா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதல் கலகலப்பு!...

காதலர்க்கு கலகலப்பை ஏற்படுத்த காதலர் தினம் வருமாமே
உண்மைக் காதல் வளமாக வாழ்வை வளம்படுத்துமே
நான்கு விழிகளும் கதைகள் பேசி வரலாறு படைத்திடுமே
நாமாக முன்னின்று பற்பல வழிகள் சமைத்திடுமே
இரு இதயங்கள் இணைப்பு மூலம் தளம் அமைத்திடுமே
காதலர் கல்லூரி வாசலில் காத்திருந்து கடிதம் உறவாடிடுமே
கடற்கரை பூங்கா என்று கதைகள் பல பரிமாறிடுமே
கவிஞர்கள் கற்பனையில் கவிபாடிச் சிறப்பிடுமே
குதூகலமாய் அரங்கில் பாராட்டுப் பெறுவதும் வரலாறாகுமே
இல்லத்திற்கும் நல்லறத்திற்கும் அத்திவாரமிடுவதுமே
வாழ்வின் இறுதிவரை ஊன்று கோலாய் வழிவகுத்திடுமே
விலங்குகள் பறவைகள்கூட காதலை வெளிப்படுத்திடுமே
பூ மொட்டும் இனபேதமின்றி ஒரே செடியில் மலர்ந்திடுமே
ஒன்றாய் மலர்ந்து கலகலப்பாக ஒருவர் முகம் பார்த்தே
இருவரும் ஒன்றாய் மடிந்து மறைவதும் காதலை வேகப்படுத்துமே
காதல் என்பது கா- காத்திருந்து, த - தவித்திருந்து
ல் - இல்லாமல் போவதே காதலாமே!...காதலாமே!...

திருமதி ஜெயா நடேசன்
யேர்மனி

---

# காதலர் தின வாழ்த்துக்கள்!....

காதலர் தினத்தைக் கொண்டாடும் அனைத்து உள்ளங்களுக்கும் வாழ்த்துக்கள்!...இத்தினத்தைப்போல் வாழ்வில் எல்லா நாட்களும் மகிழ்ச்சிகரமாக அமையட்டும். அன்பென்னும் இதய வீணையை மீட்டி அகிலத்தில் அனைவரும் வாழ்வோமாக!...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரங்களின் காணிக்கை....

- வசந்தா ஜெகதீசன்-

அன்பின் நேசம் பரிமாற்றம்
அணைக்கும் கரமாய் உருமாற்றம்
அவலச்சுமையை தான் போக்கும்
கரங்களின் காணிக்கை உரமாகும்

அடிப்படை வசதிகள் குன்றிநிற்கும்
தாய்நிலக் குழந்தைகள் ஏராளம்
கல்வியின் விளக்கு இருளாகும்
கரங்களின் காணிக்கை ஒளியேற்றும்

போரின் வடுக்கள் புடைசூழ்ந்து
நலிந்து வாழும் நம் உறவோர்
பாரில் ஏற்றம் பெற வேண்டும்
கரங்களின் காணிக்கைப்
பலம் வேண்டும்

சிறுசிறு துளியின் சேமிப்பில்
சமுத்திரமாகுமே மழைத்துளிகள்
தாய்நிலம் தனித்துவம் பெற்றுயர
கரங்களின் காணிக்கைக் கம்பீரம்

நிலத்திலும் புலத்திலும் நிதம் மலரும்
நித்திய வெற்றிக்கு உரமாவோம்
அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு
கரங்களின் காணிக்கை
கல்விக்கு விளக்கு!....

## வரம்வேண்டும் வைகறையே....

ஞாலத்தின் கதவுகள் நயம்பட
நம்பிக்கை வீரம் மெய்ப்படும்
தூரத்து நீராய் நாம்
ஆபத்துக்குதவமால்
அன்னியப்படும்-வேளை
வலி கொண்ட வரட்சி
வறுமையின் புரட்சி
நித்தமும் நிழலாய்
நீடித்து நிலைக்கும்
நிஜமற்ற உறவாய்
பலமற்ற நட்பாய்
திடமற்றுத் தேசம்
தன்னிலை இழக்கும்
இனமற்ற நாதிகளாய்
இல்லையொரு தேசமென
புலத்திலும் பூத்தகொடி
பலமற்றுப் பாதைமாறும் முன்
வரம் வேண்டும் வைகறையே
வரட்சியற்றுத் தாய்தேசம்
எழுச்சி கொள்ள
வரம்வேண்டும் வைகறையே!....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கலியாணம்!......

-நெடுந்தீவு முகிலன்-

(குடிக்கும் இளஞர்கள் திருமணம் செய்துகொள்ள வேண்டாம்)

கண்களை சமாதனப்படுத்தினேன் - ஆனால்
அழுகையினை எழுத்துகளில் கொட்டி விடுகிறேன்.
கிழிந்த பழைய சேலைக்கு ஆயுள் அதிகம் - அதை
விட்டால் அவள் எதை உடுத்துவாள்.
வயிறு நிறைய ஊட்டி விட்டு - அடிப்பானையில்
மிஞ்சிய கருக்லை வழித்த கஞ்சியோடு கலக்கிப் பசியாறுவாள்.
அவளுக்கென்று எதுவும் இருந்ததாயில்லை... நான்
எதை கேட்டாலும் இல்லை என்று சொல்லாமல்
வயலுக்கு கூலிக்கு போவாள்.
கலப்பையும் மண்வெட்டியும் - கொப்பளம் போட்ட
அவள் வறுமை கரங்களைப் பார்த்து
இரக்கப்படாத நாள் இருக்கவே இருக்காது.
சிம்மாடு இல்லாமல் தலையில் விறகு கட்டோடும்
இடுப்பில் தண்ணிக் குடத்தோடும்
மாலைக்கருக்கலில் வீடு வருவாள்.
படலை திறக்கும் சத்தம் கேட்டதும்
புழுதியோடு ஓடுவேன். - என்னை
தனிமையில் விட்டு போன கவலையோடு
தூக்கி அணைப்பாள்.
தாலி அறுந்த போது - அவள் பட்ட துன்பத்திற்கு
ஆறுதல் சொல்லும் வயதில் நான் இல்லை...
ஆண்டு சில கடந்ததும் அடுத்த கலியாணம்
கேட்டு வந்த போது - அவள்
என்னை விட்டு போகவில்லை...
வாழ்க்கையின் பாதி தூரம் கடப்பதற்குள் - அவள்
முழுதாவே நின்மதியை தொலைத்து விட்டாள்.
எலும்பையும் தோலையும் கொண்டு இயங்கும்
பிராணியாய் நகர்ந்து கொண்டு ...
பகலில் வியர்வையையும் - இரவில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீரையும் எனக்கு தெரியாமலே சிந்தினாள்.
வலியோடு வாழப்பழகி விட்ட அவள்
ஒரு நாள் காலையில் திண்ணை
ஓரத்தில் பிரேதமாக கிடந்தாள்.
எனக்கு தெரிந்து நான் அழுத முதல் நாள் அதுவே...
சுற்றமும் சொந்தமும் கூடி எனக்கு
ஆறுதல் சொன்னார்கள். - அவளை
கொழுத்துவதற்கு கொள்ளியையும் தூக்கித் தந்தார்கள்.
எரிந்து அவள் சாம்பலானாள் - நானே என்
அப்பனை போலவே குடிக்கு அடிமையானேன்.
ஆண்டு சில கடக்க எனக்கும் கலியாணம்
கேட்டு வந்தார்கள். - நான் மறுத்து விட்டேன்.
தனிமையில் என் தாய் பட்ட துயர் அறிவேன் - எப்படி
இன் ஓர் பெண்ணை விதவையாக்கிடுவேன்!.......

---

வேறுபாடு!....
முதலாளியின் பெண்
பேனை பிடிக்கிறாள்
ஏழையின் பெண்
பானை பிடிக்கிறாள்!...

தலை எழுத்து!...
இருபது வயது கன்னிப்பெண்
நாற்பது வயது மொட்டைத்தலையனை
மணம் முடிப்பது மட்டுமல்ல
முதல் குழந்தை ஆண்வேண்டுமாம்!...

சந்தேகம்!....
இலையை அரித்து
உண்ணும் புழுப் போன்றது
சந்தேகம் என்னும் கொடிய வியாதி!...

கூட்டு!.....
கூட்டுத் திட்டம்
கூட்டுக் கடத்தல்
கூட்டு வன்புணர்வு
கூட்டுக் கொலை
இதுதான் கூட்டு...உறவு!....

படையல்!...
குல தெய்வத்திற்குப்
படையல் வைக்கும் மகன்
பெற்ற குலமாதா - தெருவில்
பிச்சைத் தட்டோடு!...

போதனைகள்!..
சாதி மதங்கள் இல்லை என்று
நீதியைக் கொன்று நிதியைத்தின்று
போதனை செய்யும் மனிதர்கள்!...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## S.M.G கோபு அண்ணா!..

மட்டுநகர் மண் தந்த மாமேதை
S.M.G மாதவம் செய்து பெற்ற
மகத்தான மனிதநேயன் தார்மீகப்
பணிசெய்த தயாபரன் தமிழ்மறவன்
பார்போற்றும் மூத்தபத்திரிகையாளன்
ஈழநாடு பத்திரிகையும் ஈழமுரசு
வீரகேசரியும்உணவுக்குதொழிலாய்
உணர்வுகட்கு உறைவிடமாகி
இரவுபகல் கண்விளித்து
இருள் விலக்கி எழுதுகோலால்
தமிழினத்தை எழுச்சிபெறவைத்தவர்
ஆசிரியத் துறையிலே ஆறரை
தசாப்தங்கள் தலையங்கம்
எழுதுவதில்தலைநிமிர்ந்துவாழ்ந்தவர்
பேனாமுனையினால் போராட்டத்தின்
பக்கபலமாயிருந்த அஞ்சாநெஞ்சன்
அரசியல் விமர்சகன்
ஊடகச்சமராடியே உலகின்முன்
தமிழினத்தின் விடுதலைக்காய்
போராடி வேற்றவனால்சிறைப்பட்டார்
சிறைப்பட்ட அனுபவத்தை சீரான
நூல்வடிவில் ஈழமண்ணில்
ஓர் இந்திய சிறை பதிப்பாக்கிட்டார்
கோபு என்றழைக்கப்படும் கோபுரம்
சாய்ந்ததென்றுகேள்வியுற்றபோதினில்
கேவியது என் நெஞ்சம் நான் வடித்த
கவிப்பாடல்கேட்டு நீர் சிந்திய
விழிகள் என் நெஞ்சில் தடமாய்
என்றென்றும் நிலைத்திருக்கும்

கலைவாணி.ஏகானந்தராஜா
ஜேர்மனி

## ஹலோ ரஜினி !....

எம் தங்கைகளையும்
அக்காக்களையும் கற்பழித்து
கொன்று வீசும் போது
எங்கிருந்தீர்கள் ?
திரு ரஜினி அவர்களே..!
எங்களோடு ஜல்லிகட்டு
களமாடினாயா..
நெடுவாசலில் போராடினாயா..
எங்கள் தங்கைகளையும்
அக்காக்களையும்
கற்பழித்து கொன்று வீசினானே
அப்போதும் தமிழ்நாட்டில் தானே
இருந்தீர்கள்?
மருத்துவமனையை
குண்டுபோட்டு அழித்தானே
சிறுவர்கள், குழந்தைகளை
கொன்றுகுவித்தானே
அப்போது என்ன செய்தீர்?
தமிழன் என் உயிர்! தமிழ்
என் மொழி! என்று ஆடிப்பாடி
எம்மக்கள் பணத்தால்
உண்டு கொழுத்தீரே?
ஆம். இப்போ தமிழர்
ஆதரவும் அரவாரமும்
வாக்கும் தேடும் ரஜினியே
இலங்கைத் தமிழரின்
கண்ணீர் துடைக்க
என்ன செய்தீர்!....
என்ன செய்வீர்!....

சிவம்-யேர்மனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பொன்னிமகள் சின்னத்தங்கம்!....

பொன் குலேந்திரன் -கனடா

அழகினிலே மெருகூட்டிய தங்கம்
நமுட்டுச் சிரிப்புக்காரி
நறுக்கென்ற பேச்சுக்காரி
ஆடவர் கண்வீச்சுக்கு
அலட்சியப் பார்வைக்காரி
காளையரைக் கவரும் கட்டுடலும்
திரண்ட புடைத்த பின்னழகும்
பவளம்போல் பல்வரிசையும்
கொவ்வைச் சொண்டுகளும்
கிள்ளத் தோன்றும் கன்னங்களும்.
தலைமேல் மீன் கூடையோடு
தாளம் தவறாத நடை போட்டு
கைவீச்சும் அதற்கேற்ப அசைபோட
ஒடிந்துவிடும் இடை தெரிய
சுன்னாகச் சந்தை நாடி
ஒயிலாகப் போய்ச் சேர்வாள்.
விதானையார் வினாசித்தம்பியும்
போஸ்ட் மாஸ்டர் பொன்னையரும்
வட்டிக்கடை வடிவேலுவும்
சங்கக்கடைச் சதாசிவமும்
மணியகாரர் மாணிக்கமும்
பள்ளிக்கூட வாத்திமாரும்
இப்படிப் பல இளசுகளும்
அவள் அழகை இரசிப்பதற்காக
மீன் வாங்கும் வாடிக்கையாளர்.
என்ன தங்கம் சீலை புதுசே?
உன் நிறத்துக்கேற்ற பிளவுசு
இரசித்தபடி
ஒரு இளைஞன் கேட்டான்.
என்ன ராசாத்தி முகத்தில் வாட்டம்
வேலை என்ன கனத்துப்போச்சோ?
நான் வரட்டே உதவி செய்ய ?
விசனத்துடன் இது
வினாசியின் கேள்வி
என்ன குஞ்சுவை கனகாலம்
காணோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காய்ச்சல் ஏதும் வந்ததோ உனக்கு?
மருந்து வாங்கி நான் தரவே.
கவலையுடனும் கந்தையர் கேட்டார்.
உன்னைக் காணாமல்
ஊரில் பேச்சு
சந்தையின் செழிப்பு அதனால் போச்சு
மணியகாரரின் எண்ணம்,
தெரியாமலா என்ன?
உனக்கும் சேர்த்தோ மீனின் விலை
எதுவும் நான் வாங்கத் தயார்
நக்கல் பேர்வழி நடராசர் பேச்சு.
உன்றை நெற்றியில்
அதென்ன திலகம்.
தங்கம் கழுத்தில் தங்கமா மினுங்குது
வாழிக்கையாளரின்
வேடிக்கைக் கேள்விகள்
அம்புபோல் அவளை தைத்துநின்றன.
என்ன கரிசனம். என்ன அன்பு
பேச்சினில் தான் எத்தனை வம்பு.
சட்டைக்குள் கையை
வைத்தாள் அவள்
எல்லோரும் விட்டனர் பெருமூச்சுக்கள்
வெளியே வந்ததோ மார்பகத்தே
மறைத்து வைத்திருந்த தாலிக்கொடி
எந்தன் புருஷன் இட்ட திலகம் இது
அவர் கையால் கட்டிய தாலியிது
இப்ப நான் ஒருவனுக்குச் சொந்தம்.
கொஞ்ச நேரத்தில் என்
மச்சான் வருவான்
கேள்விகளை அவரிடம் கேளுங்கள்
சரியான பதில்களைத்
தக்கபடி தருவார்.!....

கேள்வி கேட்டவர்கள் அனைவரையும்
அடுத்த வினாடி அந்த
இடத்தில் காணோம்
வேறு தங்கத்தை தேடிப்போயினரோ?.
மச்சான் வரமுன் விரைந்து ஓடினரோ?

என்னடி தங்கம். உனக்குத் திருமணம்
எப்பவடி நடந்தது.
உண்மையைச் சொல்லடி.
கேள்வி கேட்ட செல்வியைப் பார்த்து
கெக்கட்டம் விட்டுச்
சிரித்தாள் சின்னத்தங்கம் !...


என்ன அக்கா உனக்கு தெரியாமலா
எனக்குத் திருமணம்?
கிலிட்டுத் தாலியும் ஒரு கொஞ்சம்
குங்குமமும்
பலர்பார் வையிலும்
கொஞ்சலிலுமிருந்து
என்னைக் காக்கத்தான் இந்த வேஷம்

-------------



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்சஞ்சிகை 186ம் இதழின் அட்டைப்படத்துக்கான கவிதை...




பொழுதெல்லாம் எழுத்துக்களில் பொருந்திவிட்ட இணைவு
பொறுமையும் அடக்கமும் பூத்திருக்கின்ற பொலிவு
முழுமையான அர்ப்பணத்தில் முகிழ்ந்துவிட்ட நுகர்வு
முதுமையிலும் தளர்ந்திடாத முனைப்புகளில் நிமிர்வு..

பழுதில்லாப் பணிகள் செய்து பாரினிலேஉயர்வு
புத்திரிகை ஊடகங்களாய்ப் பல்துறைகளில் முதிர்வு
எழுதுகின்ற எழுத்துக்களால் உள்ளங்களில் அமர்வு
ஊறுகளில்லா வரலாறாய் உன்னதத்தின் பகிர்வு..

எழுதிவைத்த படைப்புகள் இலக்கியங்களாய் மிளிர்வு
எக்காலும் பொருந்துகின்ற எச்சங்களாய்ப் பதிவு
விழுதுகளாய் விட்டுச்சென்ற விற்பன்னர்கள் வரவு
வித்துவத்தை வியக்கவைத்து விளம்புகின்ற தெளிவு..

தொழுது நின்று எவர்மாட்டும் துதிபாடிடாத தினவு
தோற்றமும் மறைவும் மனதில் தூர்ந்திடாத வதிவு
அழுதாலும் அடங்கிடாத ஆழம்நிறைந்த நினைவு
ஆதரவாய் எமையெல்லாம் ஆற்றுப்படுத்தும் உணர்வு..

-அம்பலவன்புவனேந்திரன்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தை மகளுக்கு.. தயவாய் ஒருமனு..!

மின்னலெனவே ஒளிபரப்பி மிடுக்கோடு வந்தவளே..!
மிகையில்லாக் கோரிக்கையை முன்வைத்தேன் பாராயோ
கன்னல் மொழிபேசிக் களித்திருக்க நேரமில்லை - எம்
கன்னியரின் கண்கள் சிந்தும் கண்ணீரைத் துடைத்திடுக!
உன்னின் வரவால்தான் உலகில் மாற்றம் நிகழுமென்ற
உயர்வான நம்பிக்கையை உண்மையாய் ஆக்கிடுக..!

பின்னலாய் ஜடைபோட்டுப் பேதையென வந்தவளே..!
பிழையில்லா வேண்டுதலை பிரார்த்தனையாய் வைக்கிறேன்
ஜன்னல் கம்பிகளிடை யாசிக்கும் இளைஞர்களின் - நீள்
யாகத்தை முடிப்பதற்காய் யௌவனத்தை நோக்கச்செய்க.!
என்னின் வேண்டுதலே எல்லோரதும் மனுவாய் ஏற்று
இளையவளே இந்த ஆண்டில் எமக்கு நியாயத்தை தந்திடுக..!

பொன்னில் நகையணிந்து பதுமையாய் வந்தவளே..!
புவியின் விண்ணப்பத்தினை புரிந்துநீயும் செயலாற்றிடுக
செந்நெல் அரிசிபொங்கி செங்கரும்பு முக்கனிகளுடன் -சீர்
சிறப்பாய்ப் படைத்திடச் செழிப்பானவோர் தருணமில்லை
பன்னில் நெய்துவைத்த பாயினைப்போல் கிடக்கின்றோம்
பாரினில் தமிழர் நிமிர்வதற்கு பரிந்துரைகள் செய்திடுக..!

சென்னியின் மகளாகவே சீர்களோடு வந்தவளே..!
செப்புகின்ற வேண்டுகோளைச் சீரியமாய்ச் செவிமடுத்து
மன்னிய மனிதம் தழைத்து மகிழ்ச்சியிங்கு பெருகிடவே - இம்
மாநிலத்தில் அமைதியுறையும் மார்க்கத்தை நிலைநாட்டுக..!
இன்னல்கள் தீர்ந்துவிட்டால் எந்நாளும் பொங்கல்தான்
இஷ்டமுடன் நீவந்து எம்வாசல்களில் இறங்கிடுக..!

-அம்பலவன்புவனேந்திரன்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அங்கும் இங்குமாய்....

(சார்ள்ஸ் - நெதர்லாந்து)

இடையிடையே வயல் வெளியில்
உழவு நடக்கிறது
இயந்திரங்கள் ஆங்காங்கு
இயங்குகின்ற ஓசை இருந்தாலும்
எங்கும் ஒரே அமைதி

ஏது மொரு ஆர்ப்பாட்டம்
இல்லாமல் முன் நோக்கி
பாலி ஆறு நகர்கிறது.
ஆங்காங்கே நாணல்
அடங்காமல் காற்றோடு
இரகசியம் பேசி
ஏதேதோ சலசலக்கும்.
எண்ணற்ற வகைப் பறவை
எழுப்பும் சங்கீதங்கள்.
துள்ளி விழுந்து
'துழும்' என்னும் வரால்மீன்கள்.

என்றாலும் அமைதியை
ஏதோ பராமரிக்கும்
அந்த வளைவை அடுத்து
கருங்கல் மறைப்பில்
அடர்ந்துள்ள நாணல் அருகே
மணற் கரையில் இரு மருங்கும்
ஓங்கி முகடு கட்டி
ஒளி வடிக்கும்
மருத மர நிழலில்
எங்கள் கிராமத்து
எழில் மிகுந்த சிறு பெண்கள்
அக்குவேறு ஆணிவேறாய்
ஊரின் புதினங்கள்
ஒவ்வொன்றாய் ஆராய்ந்து
சிரித்து
கேலி செய்து
சினந்து

வாய்ச் சண்டையிட்டு
துவைத்து
நீராடிக் களிக்கின்றார்.
ஆனாலும்
அமைதியாய்ப்
பாலி ஆறு நகர்கிறது

அந் நாளில்
பண்டார வன்னியனின்
படை நடந்த அடிச் சுவடு
இந்நாளும் இம்மணலில்
இருக்கவே செய்யும்
அவன்
தங்கி இளைப்பாறி
தானைத் தலைவருடன்
தாக்குதலைத் திட்டமிட்டு
புழுதி படிந்திருந்த
கால்கள் கழுவி
கைகளினால் நீரருந்தி
வெள்ளையர்கள் பின் வாங்கும்
வெற்றிகளின் நிம்மதியில்
சற்றே கண்ணயர்ந்த
தரை மீது அதே மருது
இன்றும் நிழல் பரப்பும்
அந்த வளைவுக்கு அப்பால்
அதே மறைப்பில்
இன்னும் குளிக்கின்றார்
எங்களது ஊர்ப் பெண்கள்

ஏது மொரு
ஆர்ப்பாட்டம் இல்லாமல்
பாலி ஆறு நகர்கிறது!........

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு நோயாளிகள் தவிர்க்க வேண்டிய காய்கறிகள்!........

உலக மக்கள் மத்தியில் நீரிழிவுநோய் பரவிக்கொண்டேவருகிறது. இதற்கு உணவில் அதிகப்படியான சர்க்கரையைச் சேர்த்துக்கொள்வது ஒரு முக்கியகாரணமாகும்.

ஆரோக்கியம் என்று நினைக்கும் காய்கறிகளில் அதிக கவனத்துடன் இருக்கவேண்டும். இல்லாவிட்டால் அந்தக் காய்கறிகளே உயிருக்கு ஆப்புவைத்துவிடும்.

ஏனெனில் சில காய்கறிகளில் ஸ்டார்ச் எனப்படும் மாவுப்பொருள் அதிகம் இருக்கும், இத்தகைய காய்கறிகள் இனிப்பாக இருக்கும்,அதற்காக இனிப்பாக இருக்கும் அனைத்துக் காய்கறிகளையுமே நீரிழிவுநோயாளிகள் சாப்பிடக்கூடாது என்பதில்லை.

பூசணிக்காய் இனிப்பாகதான் இருக்கும். ஆனால் இதனை நீரிழிவுநோயாளிகள் பயப்படாமல்சாப்பிடலாம். மேலும் சிலகாய்கறிகளில் கிளைசீமிக் இன்டெக்ஸ் அதிகம் நிறைந்திருக்கும்.

இத்தகைய உணவுகளை நீரிழிவுநோயாளிகள் நினைத்துக்கூடபார்க்கக்கூடாது. சரி, இப்போது நீரிழிவு நோயாளிகள் சாப்பிடக்கூடாத சில காய்கறிகளின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. அதைப்படித்து, நீரிழிவு இருந்தால், அவற்றை உணவில் சேர்ப்பதைத் தவிர்த்துவிடுங்கள்.

-உருளைக்கிழங்கு:-

உருளைக்கிழங்கில் மாவுப்பொருள் அதிகம் நிறைந்திருப்பதால், இந்த உணவுப்பொருளை நீரிழிவுநோயாளிகள் தவிர்க்கவேண்டும்.

-சேனைக்கிழங்கு:-

பொதுவாகக் கிழங்குகள் அனைத்திலுமே மாவுப்பொருளானது அதிகம் இருக்கும். அதிலும் சேனைக்கிழங்குகளைச் சாப்பிட்டால் இரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவு சொல்லமுடியாத அளவில் அதிகரிக்கும். எனவே இந்தக் கிழங்கை உணவில் சேர்க்கக்கூடாது.

-பீன்ஸ்:-

பீன்ஸ் இனிப்பாக இல்லாவிட்டாலும், இதில் ஸ்டார்ச் மிகவும் அதிகம் உள்ளது. அதற்காகப் பீன்ஸ்களை முற்றிலும் தவிர்க்க வேண்டுமென்பதில்லை. ஆனால் அவற்றை நீரில்வேக வைத்து அதுவும் அளவாகச் சாப்பிடவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

-பீட்ரூட்:-

பீட்ரூட் ஒரு வேர்க்காய்கறி என்பதால் இதுமண்ணில் உள்ளஅனைத்து இனிப்புக்களையும் உறிஞ்சி மிகவும் இனிப்பான சுவையில்உள்ளது. அதற்காக இதனை அறவே தவிர்க்க வேண்டுமென்பதில்லை. ஏனெனில் இதில் மற்ற நன்மைகளும் அடங்கியிருப்பதால், இதனை 2-3 வாரத்திற்குஒரு முறைசாப்பிட்டாலே போதும்.

-ஸ்குவாஷ் (Squash):-

ஸ்குவாஷ் ஒரு இனிப்புச்சுவையுடைய குளிர்கால காய்கறி. இதில் கிளைசீமிக்இன்டெக்ஸ் மிகவும் அதிகம் உள்ளது. எனவே நீரிழிவுநோயாளிகள் இந்தக்காய்கறியில் எவ்வளவுதான் நன்மைகள் இருந்தாலும் அறவே தவிர்க்கவேண்டும்.

-பச்சைபட்டாணி:-

பச்சைபட்டாணியில் ஸ்டார்ச் அதிகம் நிறைந்திருப்பதால், இந்த உணவுப்பொருளையும் நீரிழிவு நோயாளிகள் தவிர்க்கவேண்டும்.

-தக்காளி:-

தக்காளி சேர்க்காத உணவுகளைப் பார்க்கவேமுடியாது. இருப்பினும் இது இனிப்புச்சுவையுடையதால், இதனைப் பச்சையாகச் சாப்பிடுவதைத் தவிர்க்கவேண்டும். மேலும் உணவுகளிலும் தக்காளியை அளவாகப் பயன்படுத்தவேண்டும்.

-சோளம்:-

சோளத்தில் பலவகைகள் உள்ளன. அதில் ஒன்றுதான் ஸ்வீட்கார்ன். இதன்பெயரிலேயே, இதுமிகவும் இனிப்பானது என்பது தெளிவாகத் தெரிவதால், இதனை நீரிழிவுநோயாளிகள் அறவேதவிர்க்கவேண்டும். அதுமட்டு மல்லாமல், இதில் எண்ணற்ற அளவில் ஸ்டார்ச் நிறைந்துள்ளது.

-வாழைவகைகள்:-

வாழைப்பூ, வாழைத்தண்டு போன்றவற்றை அதிகம் சமைத்துச் சாப்பிடுவோம். ஆனால் இந்த உணவுப்பொருட்களிலும் ஸ்டார்ச் அதிகம் நிறைந்துள்ளது. குறிப்பாக வாழைப்பழத்தில் இனிப்புச்சுவை அதிகம்உள்ளது, எனவே இந்த உணவுப் பொருட்களை தவிர்ப்பதுநல்லது.

-சர்க்கரைவள்ளிகிழங்கு:-

உருளைக்கிழங்குடன் ஒப்பிடுகையில் சர்க்கரை வள்ளிகிழங்கில் ஸ்டார்ச் குறைவாக இருந்தாலும் இதில் கிளைசீமிக்இன்டெக்ஸ் அதிகம் உள்ளது. எனவே இத்தகைய கிழங்கை அறவே தவிர்க்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயகச் செய்திகள் சில.......

2017 A/L பரீட்சை 163,104 பேர் பல்கலைக்கு தகுதி தற்போது வெளியிடப்பட்டுள்ள க.பொ.த. உயர்தர பரீட்சை பெறுபேறுகளுக்கு அமைய, இவ்வாண்டு கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர் தர பரீட்சைக்கு, 2 இலட்சத்து 37,943 பாடசாலை பரீட்சார்த்திகள், 77,284 தனிப்பட்ட பரீட்சார்த்திகள் உள்ளிட்ட 3 இலட்சத்து 15,227 பேர் விண்ணப்பித்திருந்தனர். அவர்களில், 1 இலட்சத்து 63,104 பேர் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

இலங்கையில் மட்டும் 45,000 பேர்! போதைக்கு அடிமையானவர்கள் இருப்பதாக மருந்துகள் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது.

3 இராணுவத்தினர் உட்பட 41 பேருக்கு யாழ். நீதிமன்றம் மரண தண்டனை யாழ்.மேல் நீதிமன்றில் கடந்த 13 வருடங்களில் 3 இராணுவத்தினர் உட்பட 41 பேருக்கு மரண தண்டனை விதித்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

லேக் ஹவுஸ் நிறுவனத்தினால் வெளியிடப்படும், சகோதர பத்திரிகையான டெய்லி நியூஸ் (Daily News), 03.01.2018ல் தனது நூறாவது ஆண்டை கொண்டாடியுள்ளதுடெய்லி நியூஸ் பத்திரிகை, 1918 ஜனவரி 03 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கையில் ஆண்டுதோறும் 80000 பேர் பாம்புக்கடிக்கு உள்ளாவதாகவும் இவர்களில் 400 பேர் மரணிப்பதாகவும் களனிப் பல்கலைக்கழக ஆய்வொன்று குறிப்பிடுகின்றது

ஒரே வருடத்தில் ஒன்றே முக்கால் இலட்சம் டெங்கு நோயாளர்கள் நாட்டில், கடந்த ஓராண்டு காலப் பகுதியில் மட்டும் ஒரு இலட்சத்து 76,248 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டிருப்பதாக சுகாதார அமைச்சின் தொற்றுநோய்த் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

13. இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரையில் டெங்கு நோயினால் 360 பேர் உயிரிழந்தாக அறிவிக்கப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சும், தொற்றுநோய் தடுப்புப் பிரிவும் இதனை அறிவித்துள்ளன. அத்துடன் இந்த காலப்பகுதியில் சுமார் ஒரு லட்சத்து 50 ஆயிரத்து 407 பேர் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடுக்கோ புதிர்ப்போட்டி முடிவு - 3

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 7 | 3 | 8 | 5 | 4 | 6 | 9 | 1 |
| 1 | 8 | 5 | 7 | 6 | 9 | 2 | 4 | 3 |
| 4 | 6 | 9 | 2 | 1 | 3 | 7 | 5 | 8 |
| 8 | 3 | 6 | 5 | 9 | 1 | 4 | 2 | 7 |
| 9 | 1 | 7 | 6 | 4 | 2 | 3 | 8 | 5 |
| 5 | 2 | 4 | 3 | 8 | 7 | 1 | 6 | 9 |
| 7 | 4 | 2 | 9 | 3 | 5 | 8 | 1 | 6 |
| 3 | 9 | 8 | 1 | 2 | 6 | 5 | 7 | 4 |
| 6 | 5 | 1 | 4 | 7 | 8 | 9 | 3 | 2 |

# சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு-92

| | | | |
|---|---|---|---|
| கா | த | ல | ர் |
| ம் | ட | ட் | ப |
| ர | கா | டு | ம் |
| கா | ணை | வீ | க |

# குறுக்கெழுத்துப்போட்டி முடிவு - 153

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| தை | ப் | பொ | ங் | க | ல் | கா |
| க | ளை | ரு | உ | ற் | றா | ர் |
| று | கா | ளா | ன் | ப | இ | கா |
| சி | ளை | தா | த் | க | த் | ல |
| ச் | பா | ர | ம் | த | தா | ம் |
| ர் | பி | ம் | த | ரு | லி | தா |
| தே | ர் | த | ல் | க | வே | டி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படியும் நடக்குது இங்க!....

-மதவடி மயிலர்-



வணக்கம்!...வணக்கம்!..... நான்தான் மதவடி மயிலன்.. மீண்டும் வந்திருக்கிறன்.. முதல் எல்லாருக்கும் நத்தார், புதுவருடம், தைப்பொங்கல், மாட்டுப்பொங்கல் வாழ்த்துக்கள். என்ன எல்லாரும் சுகம்தானே!..சுகமோ..சுகமில்லையோ எல்லாரையும் சுகம் விசாரிப்பது எனது கடமை என்று நான் நினைக்கிறன் பாருங்கோ. நீங்கள் என்ன நினைத்தாலும் பறவாயில்லை

வெளிநாடுகளில் குறிப்பாக ஐரோப்பா, கனடா அமெரிக்க நாடுகளில் கடும் பனியும் குளிரும் வாட்டி வதைக்க அவுஸ்திரேலியா நாட்டில் கடும் வெய்யில் சுட்டெரிக்குது பாருங்கோ...இந்தக் காலநிலைக்குப் பயந்து வீட்டுக்க படுத்துக்கிடக்க முடியுமோ!..ஐரோப்பாவில் வாழும் மயிலன் இப்போ ஒண்டுக்கு மேலே ஒண்டு எனப் பல உடுப்புக்களை மாட்டிக்கொண்டு, கண்ணை மட்டும் மூடாத உடைகளோடு இந்தக் குளிருக்கை அலைய வேண்டிக் கிடக்கிறது பாருங்கோ!..

சரி...சரி.. நத்தார், புதுவருடம், தைப்பொங்கல், மாட்டுப்பொங்கல் எல்லாம் சந்தோசமாகக் கொண்டாடி இருப்பீர்களென நம்புகிறன். பலர் கண்டதெல்லாம் திண்டு குடித்து (அல்ககோல்) அதாவது ஐந்தாறு கிலோ கூடியிருப்பீர்கள் என்று நினைக்கிறன். இதனால சீனி, கொழுப்பு எல்லாம் கூடி பிறசர், சீனி சர்க்கரை வருத்தம், அது இது என ஆஸ்பத்திரியோடு சிலர் அலைவீர்கள் என எண்ணுகிறேன். எப்படி என்றாலும் எல்லாரும் சுகமாக வாழவேண்டும் என்றுதான் இந்த மயிலன் எப்போதும் விரும்புவான் கண்டியளோ!..

இனி விசயத்துக்கு வாறான் மயிலன்"கொண்டாட்டம்" ஆம் இதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றித்தான் கொஞ்சம் உங்களோடு அலசலாம் என்று எண்ணுகிறேன்.. குடும்பங்களில் பல தனிப்பட்ட விழாக்களுக்குப் பஞ்சம் கிடையாது. பிள்ளை ஒன்று பெற்றதிலிருந்து முதிய வயதை அடைந்து இறுதியாகச் செல்லும் இடம்வரை தமிழருக்குக் கொண்டாடத்திற்குக் குறைவே கிடையாது பாருங்கோ!.. இந்தப் புலத்தில் ஏன் நம் தாயகத்திலும் எத்தனைவகைக் கொண்டாட்டங்கள் பாருங்கோ!.. இதோடு பாருங்கோ இப்ப தேர்தல் கொண்டாட்டங்களும் சூடுபிடித்து கத்தி, வெட்டு கொலை எனவும் நடந்து முடிகின்றன.

சரி..சரி...இப்ப நான் புலம்பெயர் நாடுகளில் இடம்பெறும் கொண்டாட்டங்களையும் அவைகளின் செயற்பாடுகள் பற்றியும் கொஞ்சம் உங்களோடு....இப்ப பாருங்கோ கொண்டாட்டங்களுக்குப் பஞ்சமே இல்லை. எந்தப் பனி, குளிர் எண்டாலும் குடும்பம் , ஊர், பாசாலை, சங்கம், பழையமாணவர், கோவில், விளையாட்டு, ஆண்டுவிழா, நினைவுவிழா, பொன்விழா, வெள்ளிவிழா, அது இது என எப்போதும் நடைபெற்றுக்கொண்டே இருக்கின்றன. இதில் என்ன வேடிக்கை என்றால் இந்த விழாக்கள் இங்கு ஏன்? எப்படி? எதற்கு? என்று ஒரு வீதம்கூடத் தெரியாமல் விழாக்கள் எடுப்போர் பலர் உண்டு. இன்னும் சிலர் விழா எடுத்து உண்டு, குடித்து, குத்தாட்டம் போட்டு மகிழும் கூட்டம் அதிகம்பேர். அலைந்து உலைந்து திரிந்து காசைக் கரியாக்குவோரும் பலர் பாருங்கோ!.. இருந்தாலும் சிலர் நல்ல ஆரோக்கியமான விழாக்களை எளிமையாகச் செய்து இங்குள்ள சமுதாயத்தை முன்னேற்றமடையச் செய்வதோடு தாயக நலிந்தோருக்கு உதவும் பண்பையும் கொண்டிருக்கிறார்கள் . இவர்கள் உண்மையில் பாராட்டப்பட வேண்டியவர்கள். வாழ்த்துவோம்.

இன்னும் பலர் வெளிநாடுகளில் இருபத்தைந்து முப்பது வருடங்களாகச் அரசுதரும் சோசல் பணத்தில் வாழ்ந்துகொண்டு வருடம் முழுவதும் விழா எடுப்பதுதான் வேலை. இது ஒரு தொழிலாகவும் சிலருக்குப் போய்விட்டது பாருங்கோ. நல்ல காரியங்களில் அதாவது நம் இனத்திற்கு, மொழிக்கு, கலை, கலாச்சார, கல்வி, சமூக நலன்களுக்கு நீண்டகாலம் உழைத்தவர்களைப் பாராட்டுவது எந்தத் தவறும் இல்லை. இது என்னவென்றால் சுயநலவாதி-பொதுநலவாதி, நாட்டுக்கு உழைத்தவன் - உழைக்காதவன், அரசியல் பேசி வயிறு வளர்ப்பவன்-வளர்க்காதவன் பொதுமக்களைச் சுரண்டிவாழும் முதலாளிகள் என

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டாடையும், பொன்னாடையும், பிளாஸ்ரிக் மாலை எல்லாம் போட்டு, பொற்கிளியும் வழங்கிக் கௌரவிப்பது இப்பபாருங்கோ பாசனாகிப் போட்டுது. ஆலை இல்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரை என்ற கதையாகிப் போட்டுது பாருங்கோ!...

தாய்நாட்டுக்கு உதவுபவர்கள் அல்லது மொழி, இனம் வளரப் பாடுபட்டு நீண்டகாலம் உழைப்பவர்களை கௌரவிப்பதில் தவறில்லை என்பது மயிலனின் கருத்தாகும். அவர்கள் கட்டாயம் கௌரவிக்கப்படல் வேண்டும். அவர்கள் வாழும்போதே கௌரவிக்கப்பட வேண்டும். இதை தவறவிட்டுவிட்டு அவர்கள் இறந்தவுடன் விழா எடுத்து மேடைகளில் போற்றித் துதிபாடி, புழுகித்தள்ளுவதில் எந்தப் பிரயோசனமும் இல்லை பாருங்கோ.

அடுத்து தாயகவிடுதலை, துயர்துடைப்பு, நினைவஞ்சலி என்று சொல்லி விழா எடுப்பவர்களும் நிறையப்பேர் உண்டு. போதாக்குறைக்கு இந்தியாவிலிருந்தும் அரசியல் வாதிகள், கலைஞர்கள், சினிமாக்காரர்கள் என இறக்குமதி செய்து எடுக்கிற விழாவிற்கு எந்தச் சம்பந்தமும் இல்லாமல் ஆடல் பாடல் அது இது என விழாவைத்து புலம்பெயர் நாடுகளில் மக்கள் பணங்களை சுரண்டி இன்றும் பிழைப்பு நடத்தும் கூட்டத்தினர் இருந்துகொண்டிருக்கிறார்கள். தாய் நாட்டின் அரசியல், கல்வி, பசி, பட்டினி என்றுகூறிச் சேர்க்கப்படும் பெருந்தொகைப் பணம் எங்கு செல்கின்றது என்று அந்த ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். பாருங்கோ. யார்? கணக்குக் காட்டுகிறார்கள். யார்? வருடாவருடம் கணக்கறிக்கைகளை அறிக்கையாக வெளியிடுகிறார்கள். இருப்பினும் சில நல்லவர்கள், நேர்மையானவர்கள் இதய சுத்தியுடன் சேவை செய்கிறார்கள் கணக்குகளையும் பகிரங்கப்படுத்துகிறார்கள் இவர்கள் உண்மையில் பாராட்டப்பட வேண்டியவர்களே. அவர்களை ஒருமுறை வாழ்த்துவோம்.

முன்பு எல்லாம் நம்மட பல இயக்கங்கள் விடுதலை என்றும் போராட்டம் என்றும் எவ்வளவோ தொகைப் பணங்களைச் சேர்த்தார்கள் செலவழித்தார்கள் இறுதியில் என்ன? நடந்தது... எல்லாம் பூச்சியத்திலேயே முடிந்தது பாருங்கோ..பணம் கொடுத்து ஏமார்ந்த பொதுமக்கள் ஏமாளிகளாக, தறுதலைகளாக விடப்பட்டனர். கடனாளிகளாக்கப்பட்டனர். காசு சேர்த்தவர்கள் பலர் இறுதியில் ஆடம்பரவீடு, ஆடம்பரக்கார், காணி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமி, வீடு, வளவு, கடை, வியாபாரம், அது இது எனப் பிழைத்துக்கொண்டனர். ஏமாளிகளான மக்கள் இருக்கும்வரை ஏமாற்றிக்கொண்டுதான் இருக்கும் கூட்டம் புலம் பெயர் நாடுகளில்.. இன்றும்தான் பாருங்கோ!...

நமக்காகப் போராட்டம் என்று போராடி மாண்ட பல்லாயிரம் போராளிகள் உண்மையில் என்றும் நினைவுகூறப்பட வேண்டியவர்கள். அவர்கள் மறக்கப்படமுடியாதவர்கள். தியாகிகளை இந்த மயிலன் எப்போதும் வணங்குகின்றான். எப்போதும் நினைவுகொள்ளுவான். நாட்டின் போரின் வடுக்களால் இன்று பல்லாயிரம் விதவைகள், கை, கால் போன்ற அவையங்களை இழந்தவர்கள், குடியிருப்புக்களை இழந்தவர்கள், கல்வி, வேலைவாய்க்களை இழந்தவர்கள், காணாமல் போனவர்கள் எனப் பலர்

அடுத்தவேளை உணவுக்கே போராட்டம் நடாத்திக் கொண்டிருக்கிறார்கள். எந்த மக்களின் விடுதலைக்கு தம்மை அர்ப்பணித்தார்களோ!..அந்த மக்களால் புறக்கணிக்கப்பட்டு பெரும்பான்மையான போராளிகளும் விடுதலை விரும்பிகளும் இன்று நடுத்தெருவுக்கு விடப்பட்டுப் பிச்சை எடுக்கும் நிலைக்கு ஆளாகியிருக்கிறார்கள். இது பெரும் கவலைக்குரிய விடையமாகும். இந்தநிலையில் வாழ்வுக்குப் போராடிக் கொண்டிருக்கும் உறவுகளை மறந்து வெளிநாடுகளில் பலர் விழாக்கள் எடுத்து வீண் செலவுசெய்து களியாட்டம் போடும் வித்துவான்களே!.. கொஞ்சம் மயிலன் சொன்னதையும் யோசித்துப் பாருங்கோ!..

விழாக்கள் கொண்டாட்டங்கள் நினைவு மற்றும் நிகழ்வுகள் தேவையில்லை என்று இந்த மயிலன் வாதடவில்லை. அவை எளிமையான முறையில் அதாவது இங்குவாழும் சந்ததிகள் பயன்படும் வண்ணமும் தாயக சந்ததிகளுக்கு உதவும் நோக்கிலும் கொண்டாடப் படவேண்டும். வெறும் வாய்ச்சவாடல்கள், மேடைப்பேச்சுக்களை நிறுத்துங்கோ ராசாக்கள். உளச்சுத்தியுடன் பேசுங்கள், நேர்மையாகச் செயற்படுங்கள். இதைத்தான் நம் சந்ததிகளும் பின்தொடர்வார்கள். இதுதான் தற்போதைக்கு மயிலனின் அன்பான வேண்டுகோள்!. அளவானவர்கள் அளவான தொப்பியைப் போடுங்கோ!..குளிர் தாங்கமுடியவில்லை.. மயிலனும் நல்லதொப்பி போட்டுக்கொண்டு அடுத்தமுறை வருவான்..அப்ப வரட்டே!...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கல்!..........

கவிமீனா-யேர்மனி



ஊரிலை எங்கள் வீட்டிலை பொங்கல் மிக சிறப்பான ஒரு திருநாளாகும் பொங்கல் வாரத்துக்கு முதலே பெரிய ஆரவாரம் செய்வார் எனது பேரனார். அவருக்கு பொங்கல்தான் பிடித்த கொண்டாட்டம் தை பிறந்ததுமே முற்றம் எல்லாம் துப்பரவாக்கி ஒரு சிறிய புல்லுக் கூட இல்லாமே குந்தி இருந்து பிடுங்கி நிலத்திலை இருந்து விளையாடக் கூடியதாக முற்றத்தை துப்பரவாக்கி வைத்துடுவார்.

அத்தோடு பொங்கல் செய்வதுக்கு என ஒவ்வொரு வருடமும் புதிய மண் அடுப்பு வேறே தன் கையாலே செய்து காய வைத்திடுவார், ஒரு கிழமைக்கு முன்னதாக ரவுணுக்கு போய் பொங்கல் பானையும் பானைக்கு சுத்தி கட்டுற மஞ்சள் இலை தொட்டு பொங்கலுக்கு வேண்டிய கசு, பிளம்ஸ், பயறு, சக்கரை, அரிசி, கரும்பு என்று அத்தனை பொருட்களும் வாங்கி கொண்டு வந்து வைத்திடுவார். எல்லாம் அவரது காசிலைதான் வாங்குவார் அம்மாவிடம் பொங்கலுக்கு சாமான் வாங்க காசு ஒரு நாளும் அவர் கேட்டதே இல்லை. அந்த கசு பிளம்ஸில் நான் கொஞ்சம் யாருக்கும் தெரியாமே அபேஸ் பண்ணிடுவன் தெரிந்தால் கத்திக் குளறி ஆர்பாட்டம் பண்ணிடுவாங்க பொங்கல் சாமான் யாரும் தொடப்படாது என்று சட்டம் வீட்டிலை ஆனால் நான் கொஞ்சமாதானே எடுக்கிறன் என்று எடுத்திடுவன்.

அத்தோடு பொங்கலுக்குத் தென்னம் பாளைதான் எரிக்க நல்லது என்று அது வேறே எல்லாம் தென்னை மரத்துக்கு கீழே போய் பொறுக்கிக் காய வைத்து றெடியாக வைத்திடுவார், முதல் நாளே பொங்கல் கோலத்திலை வைக்க என்று சொல்லிப் பிள்ளையார் வேறே பிடித்து அதில் அறுகம் புல்லும் சொருகிக் காய வைத்திடுவார், சீனவெடி வேறே வாங்கி வைத்திடுவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொங்கல் அன்று அதிகாலை பனி மூட்டமாக இருக்கும் அந்த குளிரிலும் எனக்கு தூக்கம் போய்விடும், எழுந்து எனது பேரன் கோலம் போடும் அழகை பார்த்துக் கொண்டே இருப்பன். அம்மா திட்டுவா நீ ஏன் குளிருக்குள்ளே இப்போ வந்து நிக்குறே என்று அன்று தானாக மனதில் ஒரு சந்தோசம் குடி புகுந்து விடும் துள்ளித் துள்ளி ஓடி சுத்திச் சுத்தி வந்து எம்மட்டு சுறு சுறுப்பாக அன்று பொங்கல் கொண்டாட்டம் கொண்டாடியது இன்றும் நினைவில் வந்து சுழரும்.

பொங்கல் அன்று அதிகாலை 4 மணிக்கே எழும்பி குளித்து எனது பேரன் அவரே முற்றத்தில் கோலம் போடுவார் உலக்கை எல்லாம் வைத்து அழகான கோலம் போட்டு ,அடுப்பு வைத்து பொங்கலுக்குப் பானையிலே தண்ணியும் கொண்டு வந்து அடுப்பிலை வைத்த பிறகுதான் அம்மா பொங்கலுக்கு அரிசியும் பயறும் கழுவிக் கொண்டு வந்து பானையில் போடுவா.

நான் வீட்டு தோட்டதில் பூத்திருக்கும் பூக்களை பிடுங்கி கழுவி ஒரு தட்டில் வைத்து கோலத்தின் நடுவில் வைப்பன் அது மட்டும்தான் அவர் எனக்கு தாற வேலை. அம்மாவிடம் நான் வலு கட்டாயமாக அந்த கசு எல்லாம் வெட்டி தாறன் என்று கேட்பன் அம்மாவும் சரி என்று சொல்லி தருவா ஆனால் வாய்குள்ளே போட்டியோ கை முறிப்பன் என்று சொல்லுவா சாமிக்கு வைச்சா பிறகுதான் சாப்பிட வேணும் என்பது அவர்களது நினைப்பு.

கடவுள் நமக்குள்ளே தானே இருக்கிறார் என்பது எனக்கு அப்போதே தெரிந்ததோ என்னமோ நான் கொஞ்சம் கொஞ்சமா எடுத்து வாயில் போட்டுக் கொண்டுதான் கசு வெட்டி கொடுப்பன் சக்கரை வேறே ஒரு கட்டி எடுத்து வாய்குள்ளேபோட்டுடுவன், சில சமயம் அம்மா அதை கண்டு என்னை முறைச்சு பார்த்துப் போட்டு பேசாமே போடுவா காரணம் சத்தம் போட்டால் பேரனார் எல்லாம் தூக்கிக் கொட்டி சன்னதம் ஆடிடுவார் என்று அவவுக்கு பயம்.

பொங்கல் பானையில் பால் பொங்கி கிழக்கு பக்கம் சரிஞ்சு வழிய வேணும் அதுவரை எங்களை அந்த பக்கம் நடமாடவே விடமாட்டார் பேரன், என்னமோ நாங்கள் கிழக்குப் பக்கம் பால் பொங்கி வழியாமல் தடை படுத்திடுவமோ என்று அவருக்குப் பயம். கிழக்குப் பக்கம் பால் பொங்கி வழியும் வரை அவர்தான் அவருக்கு முகத்தில் மகிழ்ச்சி பொங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவருக்கு அப்படி ஒரு நம்பிக்கை பால் வேறு திசையில் பொங்கி வழிந்தால் வீட்டில் ஏதாவது பிரச்சனை வரும் என்று நான் அறிய ஒரே ஒரு முறை வடக்கு திசை பால் வழிந்தது அவரது முகம் கறுத்துப் போய் விட்டது அந்த வருடம்தான் எங்களது பேத்தி அவரது மனைவி காலமானார்.

அவர்தான் எங்கள் வீட்டில் முதலாளி அவர்தான் எங்கள் வீட்டில் பொங்கல் வைப்பது அவரது விருப்பம் போலே அவர் இறந்ததும் ஒரு பொங்கல் தினத்தன்று, அதனால் எனக்கு பொங்கல் தினத்தை உயிர் உள்ளவரை மறக்கவே முடியாது ஒரு நாளும். எனது பேரனும் பாரத கதையிலே வாற பீஸ்மரும் ஒரே நோக்கமுள்ளவர்கள் போலே எனக்கு இப்போ தோன்றுகிறது. பீஸ்மரும் உத்தராயணத்தில்தான் சாக வேணும் என்பதற்காகத் தன் உயிரை போக விடாது பிடித்து தை பிறந்ததும்தான் இறந்ததாக பாரதக் கதை சொல்கிறது.

எனது பேரனும் மார்கழி மாதம் தான் நோய்வாய் பட்டு படுக்கையில் 40 நாள் கிடந்தார் அப்போ எனக்கு 18 வயது என்னை கூப்பிட்டு சொன்னார் தான் தை பிறந்த பிறகுதான் சாகவேணும் என்று, அப்போது எனக்கு அதன் அர்த்தம் புரியவில்லை, கடும் சுகயீனமான நேரத்திலும் அவர் தான் சாக போறதையிட்டு கவலை இல்லை என்றும் தான் செத்தாலும் நான் அழகூடாது என்று எனது கையை பிடித்து சொன்னது என் மனதை இன்றும் உருக்கும் வார்த்தைகளில் ஒன்று.

உயிரோடு இருக்கும் காலம் வரை 18 ஆண்டுகள் எனக்கு தோழனாக, பாதுகாவலனாக, சேவகனாக, இருந்த அவரது அன்பு என்னை ஒவ்வொரு பொங்கல் தினத்திலும் இன்னும் கண்கலங்க வைக்கும். எனது பேரன் ஒரு சாமி பக்தன், தீட்சை எல்லாம் முறையாக கேட்டவர், விரதங்கள் எல்லாம் சிரத்தையாக பிடிப்வர், அத்தோடு வீரகாளி அம்மன் கோவில் திருவிழாவிலை சாமியை தூக்கி செல்வதில் அவரும் ஒருவர், நேர்மைக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர்,

அயலுக்குள்ளே வருகிற பிரச்சனைகள் எல்லாம் தீர்த்து வைக்கும் நாட்டாண்மையும் அவரே, அத்தோடு வைத்தியம் படிகாத ஒரு வைத்தியர், நாரி பிடிப்பு ,உள்நாக்கு, காய்ச்சல் ,காணாகடி .என்கிற சில நோய்களை அவர் கைவைத்தியம் மூலம் பலருக்கு தீர்த்து வைத்துள்ளார். அவர் நாவுத்து பார்த்து விட்டாலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது இடத்தில் அவருக்கு என்று ஒரு செல்வாக்கு அவர் போகும் போது திண்ணையில் இருப்பவர்கள் எழுந்து நிற்பதும் தோளிலை இருக்கும் சால்வையை எடுத்து மரியாதை செய்வதையும் நான் கண்டு அவரிடம் அது பற்றி கேட்டும் இருக்கின்றேன், அதற்கு அவர் சரி நீ பேசாமே வா அவங்க அப்படிதான் என்று மட்டும் சொல்லுவார், எந்த பெருமையும் அவருக்கு இருக்கவில்லை அவருடைய அழகும், நேரான நடையும், நிமிர்ந்த நேர்கொண்ட பார்வையும், அவருடைய பேத்தி என்கின்ற ஒரு பெருமையை எனக்கு தேடித்தந்தது, மனிதர்கள் நடக்கின்ற நல் நடத்தையை பார்த்துத்தான் அன்று மற்றவர்கள் மதித்தார்கள். அவரிடம் ஒரு விசேட தன்மை இருந்த படியால்தான் அவர் மரணத்தை தள்ளிப் போட்டு தன் விருப்பமான நாளிலே உயிர் துறந்தார் பீஸ்மரை போலே.

அவரது ஆன்மீக சிறப்போ, இல்லை அவரது விருபத்தை கடவுள் ஏற்று கொண்ட காரணமோ தெரியாது அவர் விரும்பிய படி பொங்கல் அன்று அதிகாலைதான் அவர் உயிர் விட்டார் பொங்கல் தினம் எனக்கு எனது பேரனின் நினைவு நாளாகும்!....

---

## துயர்பகிர்பகிர்வோம்....

### அமரர் சின்னத்துரை-பிறேம்குமார்



30.12.1957 - 08.01.2018

இலங்கை உரும்பராயில் பிறந்தவர். யேர்மனி BadMarienberg நகரில் வசித்தவர். "மண்" சஞ்சிகையின் 25 ஆண்டுகால வாசகர். தாய்மொழி, தாய்நாடு, சமூகப் பற்றாளர். சமூகப்பணியாளர், சமூகசிந்தனையாளர், பிறருக்கு உதவும் பண்பாளர். பன்முக ஆளுமைபடைத்தவர். எனது நீண்டகால நண்பர். மேலாக மனிதநேயச் செயற்பாட்டாளர். சிறந்ததொரு மனிதர்!.. பிரிவால் துடிக்கும் மனைவி பிள்ளைகளுக்கு மண் சஞ்சிகையின் வாசகர்கள் சார்பில் இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்!... -ஆசிரியர்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழும்போதே வாழ்த்துவோம்!..........

திருமதி ஜெயா நடேசன்
யேர்மனி

மானிட சமுதாயத்திலே தனித்துவ அடையாளங்களில் அவர்களது கலை, இலக்கியம், எழுத்துப் பணிகள் முக்கிய இடம்பிடித்துள்ளன. காலத்தின் கட்டாயமாக சமகால நிகழ்வுகளின் பதிவுகளாக, பிரதிபலிப்புக்களாக விளங்கும் இந்தக் கலை இலக்கிய எழுத்துப் படைப்புகளை வெளிக்கொண்டுவரும் ஆற்றுப்படுத்தும் கலைஞர்கள், கவிஞர்கள், எழுத்தாளர்கள், வாசகர்கள் போன்றோர்கள் எமது கவனத்திற்கும் கௌரவத்திற்கும் உரியவர்களாவர்.

ஏனெனில் அவகளின் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், மற்றும் எழுத்துக்கள் பண்பாட்டுப் பாரம்பரியங்களை இன்றுவரை கட்டிக்காத்து, வரலாறு படைத்து சான்றுகள் பெறுபவர்கள்தான் இக்கலைஞர்கள். இவர்களின் ஆற்றல், திறமைகளோடு தம் அயராத உழைப்பையும் கெட்டித்தனத்தையும் சேர்த்து தங்கள் பணியில் தொடர்ந்து ஈடுபடுத்திக்கொண்டு சாதனை படைக்கிறார்கள். "நமது கலையும் இலக்கியமும் சோறுபோடாது" என்று நம்மவர்கள் கூறுவதும் உண்டுதான். ஆனால் பொருளாதார ரீதியில் எந்த உதவிகள் வருமானங்கள் இல்லாமல் தமது நேரம், காலம், பணச்செலவு எல்லாம் பாராமல் அர்ப்பணிப்போடு இத்துறையில் தம்மை ஈடுபடுத்தி இரவு பகலாக உழைக்கும் எழுத்தாளப் பெருமக்களும் நம்மிடையே இருக்கிறார்கள் என்பதும் போற்றுதலுக்குரிய விடையமாகும்.

சாதாரண உளவியல் தத்துவத்தின்படி குழந்தை முதல் பெரியோர்வரையில் அனைத்து மனிதர்களுமே பாராட்டுக்காக, தட்டிக் கொடுத்தலுக்காக ஏங்குகிறார்கள். இவர்கள் ஏங்குகிறார்கள் என்பதைவிட எதிர்பார்க்கிறார்கள் என்பதை நாம் எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும். இவ்விடையத்தைப் பலர் கவனித்துக் கொள்வதும் இல்லை. ஒரு சிலரைத் தட்டிக் கொடுப்பதும் சிலரை விட்டுவிடுவதும் மிக மிகத்தவறான விடையமாகும். இளையோரையோ அல்லது பெரியோரையோ பங்குபற்றும் அனைவரையுமே தட்டிக்கொடுத்துப் பாராட்டுவது அவர்களை உற்சாகப்படுத்துகின்றது. இவ்விடையம் அவர்களை ஊக்குவிப்பதாகவும் அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது சாதாரணமாக உளவியல் சார்ந்த ஒரு தேவையாகவும் இருக்கின்றது.இதனால் மனிதனும் வளர்கிறான்.புதியதொரு உற்சாகமும் பெறுகின்றான்.புதியனவைகளாகப் பலத்தை தேடுதல் மூலம் தேடிப்புதியன படைக்க உந்தப்படுகின்றான். அந்த வகையில் ஒருவனைப் பாராட்டுதல் என்னும் போது அவனுக்கு ஒரு ஊக்கமாத்திரைபோல அமைகின்றது என்றும் கூறிக்கொள்ளலாம்.

இவற்றைப்புரிந்துகொள்ளாதுபாராட்டு வதையும் தட்டிக் கொடுப்பதையும், ஊக்கப்படுத்துவதையும் சிலர் தமது குறுகிய கண்ணோட்டத்தின் படி பார்த்து விமர்சிக் கின்றனர். குறிப்பிட்ட விடையத்திற்கு வராமல் எல்லைகடந்து மீறிப்போய் அலட்டிக் கொண்டிருப்பவர்களும் சிலர் நம்மிடையே இருக்கவும் செய்கின்றனர். இது அவர்களின் அறியாமையையே காட்டிக்கொள்ளும் செயலாகும் எனக்கருத வேண்டியுள்ளது.

"சேர்ந்தே இருப்பது புலமையும் வறுமையும் என்பதற்கொப்ப" நம் புலவர்கள் கவிஞர்கள், கலைஞர்கள், எழுத்தாளர்கள், ஆக்க இலக்கியப் படைப்பாளிகள் ஆகிய இவர்களில் பெரும்பான்மையினர் வறுமையோடுதான் வாழ்க்கை நடாத்துபவர்கள். உதாரணமாக மகாகவி சுப்பிரமணிய பாரதியார் வறுமையோடுதான் போராடினார். புலமையோடு வாழ்ந்தார். ஆனால் இன்றுவரை அல்ல என்றுமே புகழோடுதான் வாழ்ந்து கொண்டிருக்கிறார். அவர் மறைந்தாலும் அவர் புகழ் உலகமெல்லாம் வியந்து நிற்கின்றது.

யேர்மனியில் நான் அங்கம் வகிக்கும் தமிழ் எழுத்தாளர் சங்கத்தையும் சற்று எடுத்து நோக்கினால். யேர்மனியில் நமது மொழிக்கும் இனத்திற்கும் நீண்டகாலம் சேவை செய்தவர்களை 2014ம் ஆண்டில் ஐந்து பேரையும் 2017 அக்டோபர் மாதம் ஐந்து பேரையும் கௌரவித்திருக்கின்றது. அவர்கள் வாழும்போதே கௌரவிக்க வேண்டும் என்ற உயர்ந்த பண்பால் நேசிப்போடு அன்போடு விழா எடுத்துப் பாராட்டிக் கௌரவித்தது சிறப்பான விடையம் என்றே நான் கருதுகிறேன். இது ஒரு முன்மாதிரியான செயற்பாடாகவே என்னால் கணிக்கமுடிந்துள்ளது. இப்படியாக வருடாவருடம் இந்தக் கலை உலக எழுத்துலக நாயகர்களை சரியாக இனங்கண்டு அவர்களுக்கு விழா எடுத்து, கௌரவித்துப் பாராட்ட வேண்டும் என்பது எனது அவாவாக இருக்கின்றது. நான் மட்டுமல்ல எல்லோரும் ஒன்று சேர்ந்து இப்படியான நற்பணிகளை முன்னெடுத்து இன்புற்று வாழ்வோமாக!....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகபூபதி படைப்பாளி - பத்திரிகையாளர் - சமூகப்பணியாளர்.........



இலங்கையில் வடமேல் மாகாணத்தில் கடலும் கடல்சார்ந்த நிலமும் கொண்ட நெய்தல் பிரதேசமான நீர்கொழும்பில் 1951 ஆம் ஆண்டு பிறந்த லெட்சுமணன் முருகபூபதி (ரஸஞானி) அவுஸ்திரேலியாவில் 30 ஆண்டு காலமாக (1987 - 2018 )வசிக்கின்றார். இலங்கையில் வீரகேசரி நாளிதழில் துணை ஆசிரியராக பணியிலிருந்தவர். இலங்கை அரசின் முதலாவது ஜனாதிபதி வில்லியம் கொப்பல்லாவவிடம் 1976 இல் தனது முதலாவது சிறுகதைத்தொகுதி "சுமையின் பங்காளிகள்" நூலுக்கு தேசிய சாகித்திய விருது பெற்றவர். பின்னர் 2002 ஆம் ஆண்டு தனது முதலாவது நாவல் "பறவைகள்" நூலுக்கு அச்சமயம் இலங்கைப் பிரதமராக இருந்த ரணில் விக்கிரம சிங்கவிடமிருந்து மற்றுமொரு தேசிய சாகித்திய விருதைப் பெற்றுக்கொண்டவர்.

**ஆரம்பக்கல்வி**


நீர்கொழும்பில் 1954 ஆம் ஆண்டு விஜயதசமியன்று தொடங்கப்பட்ட விவேகானந்தா வித்தியாலயத்தில் முதல் மாணவனாக இணைத்துக் கொள்ளப்பட்ட முருகபூபதி, 1962 இல் நடந்த புலமைப்பரிசில் பரீட்சையில் தேர்வுபெற்று யாழ்ப்பாணம் ஸ்ரான்லி கல்லூரியில் இணைந்தார். பின்னர் நீர்கொழும்பு அல். ஹிலால் மகா வித்தியாலயத்தில் கற்றார். நீர்கொழும்பு விவேகானந்தா வித்தியாலயம் தற்பொழுது விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரியாக விளங்குகிறது. இக்கல்லூரியின் பொன்விழாவின்பொது முருகபூபதிக்கு முதல் மாணவனுக்குரிய விருது வழங்கப்பட்டது. யாழ். ஸ்ரான்லிக் கல்லூரி தற்பொழுது கனகரத்தினம் மத்திய கல்லூரி என்ற பெயரில் இயங்குகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதுவரையில் சிறுகதை, நாவல், சிறுவர் இலக்கியம், பயண இலக்கியம், நினைவுப்பகிர்வு, கட்டுரை, நேர்காணல், விமர்சனம், பத்தி எழுத்து முதலான துறைகளில் 21 நூல்கள் எழுதியிருக்கிறார். அவருடைய "பாட்டி சொன்ன கதைகள்" சிறுவர் இலக்கிய நூல் தமிழ்நாட்டில் 1500 ஆரம்ப பாடசாலைகளுக்கு சிறுவர் இலக்கிய வரிசையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

முருகபூபதியின் பறவைகள் நாவலை தமிழ்நாடு தஞ்சை பல்கலைக்கழக மாணவி நர்கிஸ் என்பவர் தமது M Phil பட்டத்திற்காக ஆய்வுசெய்துள்ளார். முருகபூபதியும் ஒரு சமூகப்பணியாளர். இலங்கையில் போரில் பெற்றவர்களை இழந்த ஏழைத்தமிழ் மாணவர்களுக்கு உதவும் இலங்கை மாணவர் கல்வி நிதியம் என்ற அமைப்பை அவுஸ்திரேலியாவில் 1988 இல் உருவாக்கினார். அந்த அமைப்பு தொடர்ந்து 30 வருடகாலமாக இயங்குகிறது. அத்துடன் அவுஸ்திரேலியாவில் 2001 ஆம் ஆண்டு முதலாவது தமிழ் எழுத்தாளர் விழாவை இங்குள்ள எழுத்தாளர்கள், கலைஞர்களை இணைத்து நடத்தினார். அந்த இயக்கத்தின் ஊடாக அவுஸ்திரேலியா தமிழ் இலக்கிய கலைச்சங்கம் என்ற அமைப்பையும் உருவாக்கினார். மேற்குறிப்பிட்ட இரண்டு அமைப்புகளும் விக்ரோரியா மாநிலத்தில் பதிவுசெய்யப்பட்டு, தொடர்ந்தும் தங்கு தடையின்றி இயங்குகின்றன. இலங்கையில் கொழும்பில் 2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நடைபெற்ற அனைத்துலக தமிழ் எழுத்தாளர் மாநாட்டின் பிரதம அமைப்பாளராகவும் இயங்கினார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2002 ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியா (Australia Day) தினத்தின்பொழுது சிறந்த பிரஜைக்கான விருதை (Best Citizen Award) Darebin மாநகர சபையிடமிருந்து பெற்றுக்கொண்டார். அவுஸ்திரேலியாவில் விக்ரோரியா பல்லின கலாசார ஆணையத்தின் விருதை (Multicultural Awards For Excellence) விக்ரோரியா (முன்னாள்) முதலமைச்சர் Mr. Ted Baillieu அவர்களிடம் 2011 இல் பெற்றுக்கொண்டவர். அவரது "மதகசெவனெலி" என்ற சிங்கள மொழிபெயர்ப்பு நூலில் இடம்பெற்றுள்ள சிறுகதைகள் மனிதநேயத்தையும் மனித உரிமையையும் இன நல்லிணக்கத்தையும் பற்றி ஆழமாக சிந்திக்கவைப்பவை. ஏற்கனவே அவை தமிழில் வெளிவந்து தற்பொழுது சிங்கள மொழியில் கிடைக்கிறது. "மதகசெவனெலி" என்ற வார்த்தையை ஆங்கிலத்தில் Shadows Of Memories என்று குறிப்பிடலாம். அவுஸ்திரேலியாவில் 2001 முதல் தமிழ் எழுத்தாளர் விழாவை முன்னின்று நடத்தினார்.

இலங்கையில் வீரகேசரி பத்திரிகையின் நீர்கொழும்பு பிரதேச நிருபராக 1972 இல் பணியாற்றத்தொடங்கி, ஊடகவியலாளரானார். அதே காலப்பகுதியில் யாழ்ப்பாணத்திலிருந்து வெளியான மல்லிகை இதழில் கனவுகள் ஆயிரம் என்ற முதல் சிறுகதையை எழுதி படைப்பிலக்கியவாதியானார்.









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1980 களில் இலங்கை வானொலியில் கலைக்கோலம் நிகழ்ச்சியையும் தொகுத்து வழங்கியவர். நீர்கொழும்பு இந்து இளைஞர் மன்றம், நீர்கொழும்பு இலக்கிய வட்டம், விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி பழைய மாணவர் மன்றம், இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் (கொழும்புக்கிளை) ஆகியனவற்றில் செயலாளராகவும் பணியாற்றினார். இறுதியாக வீரகேசரி நாளிதழில் துணை ஆசிரியராக பணியாற்றிவிட்டு 1987 இல் அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்து, இங்கும் உதயம் பத்திரிகையில் துணை ஆசிரியராகவும் பணியாற்றியதோடு, அவுஸ்திரேலியா தமிழர் ஒன்றியம், தமிழ் அகதிகள் கழகம், இலங்கை மாணவர் கல்வி நிதியம், அவுஸ்திரேலியா தமிழ் இலக்கிய கலைச்சங்கம் ஆகியனவற்றை உருவாக்குவதில் முன்னின்று உழைத்தார்.

இதுவரையில் நூற்றுக்கணக்கான படைப்பிலக்கியவாதிகளினதும் விமர்சகர்களினதும் வாழ்வையும் பணிகளையும் விளக்கும் கட்டுரைகளையும் எழுதியிருக்கிறார். தற்பொழுது யாழ்ப்பாணத்திலிருந்து வெளியாகும் காலைக்கதிர் பத்திரிகையின் ஞாயிறு இதழில் இலங்கையில் பாரதி என்னும் ஆய்வுத்தொடரை நாற்பது வாரங்கள் எழுதினார். இவரது படைப்புகள் ஜெர்மனி "தேனீ," கனடா "பதிவுகள்", தமிழ்நாடு "திண்ணை", பிரான்ஸ் "நடு", அவுஸ்திரேலியா "தமிழ் முரசு," அவுஸ்திரேலியா "அக்கினிக்குஞ்சு" , தமிழ்நாடு "மலைகள்" ,இங்கிலாந்து "எதுவரை", இலங்கை "புதிய ஈழநாடு" முதலான இணைய இதழ்களிலும் இலங்கை வீரகேசரி, தினக்குரல், தினமுரசு, காலைக்கதிர், தினகரன் முதலான பத்திரிகைகளிலும் ஞானம், ஜீவநதி தமிழ்நாடு தளம் முதலான இலக்கிய இதழ்களிலும் வெளியவந்துள்ளன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரஸஞானி ஆவணப்படம்

முருகபூபதியின் வாழ்வையும் பணிகளையும் சித்தரிக்கும் ரஸஞானி என்னும் ஆவணப்படம் கடந்த செப்டெம்பர் மாதம் 30 ஆம் திகதி (30-09-2017) மெல்பனில் திரையிடப்பட்டது. இந்த ஆவணப்படத்தை மெல்பனைச்சேர்ந்த கலை இலக்கிய ஆர்வலர்கள், எஸ். கிருஷ்ணமூர்த்தியும், மெல்பன் மூர்த்தியும் இணைந்து தயாரித்து திரையிட்டனர்.

## முருகபூபதியின் படைப்புகள் பற்றிய விமர்சனங்கள்

இதுவரையில் முருகபூபதி எழுதியிருக்கும் நூல்கள், இலக்கியப் படைப்புகள் பற்றிய விமர்சனங்களையும் மற்றும் கட்டுரைகளையும் நேர்காணல்களையும் - பதிவுகளையும் எழுத்தாளர்கள் தெணியான், கே.எஸ். சிவகுமாரன், செங்கைஆழியான், எஸ்.பொன்னுத்துரை, மல்லிகை ஜீவா, யசோதா பத்மநாதன், ரத்னவேலோன், புலோலியூர் சதாசிவம், செ. பாஸ்கரன், தகவம் ராசையா, சிதம்பரப்பிள்ளை சிவக்குமார், செ. யோகநாதன், ரத்னசபாபதி அய்யர், கருணாகரன், ஜெயராம சர்மா, ரேணுகா தனஸ்கந்தா, அருண். விஜயராணி, ஆவூரான் சந்திரன், 'ஜே.கே.' ஜெயக்குமாரன், நடேசன், தெளிவத்தை ஜோசப், ப. ஆப்தீன், தெய்வீகன், எஸ். கிருஷ்ணமூர்த்தி, சந்திரிகா சுப்பிரமணியன், கோகிலா மகேந்திரன்,






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறீரஞ்சனி, அஷ்ரப் சிஹாப்தீன், கிரிதரன், ஏலையா முருகதாசன், கே. எஸ். சுதாகர், கோமகன், ஷோபா சக்தி, ஜெயமோகன், அக்கினிபுத்திரன், அன்னலட்சுமி இராஜதுரை, ரேணுகா பிரபாகரன், சங்கர சுப்பிரமணியன், சாந்தி சிவகுமார், கார்த்தியாயினி ஆகியோர் எழுதியுள்ளனர்.

**முருகபூபதி இதுவரையில் பயணம்மேற்கொண்டுள்ள நாடுகள்:**
இந்தியா, சிங்கப்பூர், மலேசியா, பிலிப்பைன்ஸ், சோவியத் ருஷ்யா, கனடா, ஜெர்மனி, இங்கிலாந்து, சுவிட்சர்லாந்து, கியூபா, துபாய், பாலித்தீவு.

**முருகபூபதி தொகுத்துள்ள நூல்கள் , மலர்கள் பற்றிய விபரம்:**

நெய்தல் நீர்கொழும்பு வாழ்வும் வளமும் - 2015
Being Alive அவுஸ்திரேலியா எழுத்தாளர்களின் சிறுகதைகளின் ஆங்கில மொழிபெயர்ப்பு - 2011
சர்வதேச எழுத்தாளர் மாநாட்டு மலர் 2011
கட்டுரைக்கோவை ( சர்வதேச எழுத்தாளர் மாநாடு ) 2011
வானவில் - அவுஸ்திரேலியா எழுத்தாளர்களின் கவிதைகள் 2007
உயிர்ப்பு - அவுஸ்திரேலியா எழுத்தாளர்களின் சிறுகதைகள் 2005
நம்மவர் மலர் - 1997


**பெற்றுள்ள இதர விருதுகள்:**


அவுஸ்திரேலியா விக்ரோரியா ஈழத்தமிழ்ச்சங்கத்தின் மகத்தான இலக்கியப்பணிக்கான விருது.
அவுஸ்திரேலியா மெல்பன் தமிழ்ச்சங்கத்தின் சிறீலசிறி ஆறுமுகநாவலர் விருது.
அவுஸ்திரேலியா தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் விருது.

முருகபூபதியின் நூல்கள்
1. சுமையின் பங்காளிகள் (சிறுகதைகள்)
2. சமாந்தரங்கள் (சிறுகதைகள்)
3. வெளிச்சம் (சிறுகதைகள்)
4. எங்கள் தேசம் (சிறுகதைகள்)
5. கங்கைமகள் (சிறுகதைகள்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. நினைவுக்கோலங்கள் (சிறுகதைகள்)
7. சமதர்ம பூங்காவில் (பயண இலக்கியம்)
8. நெஞ்சில் நிலைத்த நெஞ்சங்கள் (நினைவுகள்)
9. பறவைகள் (நாவல்)
10. பாட்டி சொன்ன கதைகள் (சிறுவர் இலக்கியம்)
11. இலக்கிய மடல் (கட்டுரைகள்)
12. சந்திப்பு (நேர்காணல்)
13. கடிதங்கள் (கடிதங்கள்)
14. அம்பி வாழ்வும் பணிகளும் (ஆய்வு)
15. மல்லிகை ஜீவா நினைவுகள் (நினைவுகள்)
16. ராஜ சிறீகாந்தன் நினைவுகள் (நினைவுகள்)
17. உள்ளும் புறமும் (கட்டுரைகள் -நேர்காணல்கள்)
18. சொல்லமறந்த கதைகள் ( புனைவுசாராத கட்டுரைகள்)
19. எம்மவர் ( அவுஸ்திரேலியா படைப்பாளிகள் பற்றிய தகவல்தொகுப்பு
20 மதகசெவனலி - சிறு கதைகள் SHADOWS OF MEMORIES ( சிங்கள மொழிபெயர்ப்பு)
21. சொல்லவேண்டிய கதைகள் ( புனைவுசாராத கட்டுரைகள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைப்பொங்கல்!.......

(கெங்கா ஸ்ரான்லி - யேர்மனி)

தைப்பொங்கல் என்று நினைத்தாலே சக்கரைப்பொங்கல் வாசனை மூக்கைத் துளைக்கும் . அப்படி இருக்கும் . அந்தநாள் தைபொங்கல். ஆனால் இப்பவெல்லாம் அப்படிஇல்லை, காலத்தின் மாற்றம் நாகரிகம் வளர்ந்து, பண்பாடு மருவிவரும்வேளை தைப்பொங்கல் ஒரு நிகழ்வேதவிர அது உழவரின் உன்னத திருநாள் என்ற எண்ணம் பலருக்கு இல்லை. அதை இன்றைய சமுதாயம் ஏற்கவும்மாட்டாது. இனிவரும்காலங்களில் அது சினிமா விழாவாகவும் இருக்கலாம் என எதிர்பார்க்கலாம். பழமை மறைந்து புதுமை உருப்படும் காலமல்லவா? அதற்கேற்றாப் போல் மனிதரும் தம்மை மாற்றிக்கொள்ளுவார்.

ஈழத்திலே வன்னிப்பகுதியில். ஒரு சிறுகுடும்பம். மிகவும் கஷ்டப்பட்ட குடும்பம். ஐந்து பெண்பிள்ளைகள். தந்தையோ ஒருகடையில் வேலைசெய்பவர். அவருடைய சம்பளத்தில்தான் அவர்கள் குடும்பம் நடந்தது. மூத்தபெண்ணுக்கு 12 வயது. இப்படியே அடுத்தடுத்து குழந்தைகள். மூன்று பிள்ளைகள் பாடசாலையில் படிக்கின்றனர். இருவர்கள் கைக்குழந்தைகள்.

தைபொங்கல் என்றால் அவர்களுக்கு ஏக்கம். பக்கத்து வீடுகளில் பட்டாசு என்ன பட்டாடை என்ன, கோலாகலமாக இருக்கும். ஆனால் இவர்கள் விட்டில் ஏழ்மைதான் தாண்டவமாடும். அன்றுகாலை அப்பா வேலைக்கு வெளிக்கிட சின்னவள் அப்பா, அப்பாவரும்போது வெடி வாங்கிக்கொண்டு வருவீர்களா? பெரியவள் அப்பா எனக்குப் பள்ளிக்குபோக புதுசட்டைவேணும்அப்பா....

பெரியவள் அப்பா எனக்குபள்ளிக்கு போகபுது சட்டைவேணும் அப்பா, சரிமகளே ! முதலாளி காசுதந்தால் வாங்கிக்கொண்டு வருவேன் என்றார். மனைவியோ என்ன அப்பா புதுப்பானை, பொங்கல் சாமான் வங்கிவாங்கோ நாளைக்கு பொங்கல் என்ன? ஏன் எனக்கு தெரியாதா? முதலாளியிடம் கேட்டுப் பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டு சயிக்கிளை எடுத்துக்கொண்டு மாதவன் கடைக்கு வேலைக்குப் போனான். அங்கு முதலாளியிடம் பொங்கலுக்குப் பணம்கேட்டான். அதற்கு முதலாளி இன்னும் மாதம் முடியவில்லையே என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயா நாளைக்குத் தைப்பொங்கல் பிள்ளைகள் பார்த்துக் கொண்டிருப்பார்கள், கொஞ்சம் கருணை காட்டுங்கள் என்று கேட்க. சரி இந்தா என்று கொஞ்சக் காசைக்கொடுத்தார்.

அதைக் கொண்டுபோய் மாதவன் புதுப்பானை ,அரிசி, பொங்கல் சாமான்வாங்கி விட்டு மிகுதிக் காசுக்கு வெடியும் வாங்கிக்கொண்டுவந்தான். பிள்ளைகள், தாங்கள் கேட்ட சாமான் வாங்கித்தரவில்லை என அழுதனர். அவனால் என்னசெய்யமுடியும். பானையில் இருந்தால் தானே அகப்பையில்வரும். மாதவன் தன் ஏழ்மையை நினைத்து வருந்தினான். பிள்ளைகளுக்கு அடுத்த தைப்பொங்கலுக்கு எல்லாம் வாங்கித் தருவதாகச்சொன்னான்.

அடுத்தநாள் பொங்கலும் வந்தது சிறிதாக அந்த ஏழைக் குடும்பம் கொண்டாடியது. பக்கத்து வீடெல்லாம் கோலாகலமாகக் கொண்டாட, மாதவன் தன் நிலைமைக் கேற்றவாறு கொண்டாடினான். பிள்ளைகளுக்கு சொன்னான் அப்பா அடுத்த தைப்பொங்கலுக்குப் பிள்ளைகளுக்கு கேட்டதெல்லாம் வாங்கித்தருவேன் என்று சொல்லிப் பிள்ளைகளை சந்தோஷப்படுத்தினான். மாதவன் பெருமுயற்சி செய்து கடன் வாங்கி வெளிநாடு சென்று விட்டான். அந்தவேளை ஜேர்மனிக்கு வந்து அகதியாக புகலிடம் கேட்டு விண்ணப்பித்த அந்தவேளை ஜேர்மனிக்கு வந்து அகதியாக புகலிடம் கேட்டு விண்ணப்பித்து இருந்தான். அதற்குள் அவனுக்கு அவனுடைய நண்பனால் ஒரு உணவகத்தில் வேலை கிடைத்தது. அதில் கிடைக்கும்பணத்தை ஊருக்கு அனுப்பிவைத்தான். அங்கு மனைவி பிள்ளைகள் சந்தோஷ மாக சகலவசதியுடன் கூடிய வீடு கட்டிவாழ்ந்தார்கள்.

ஆனாலும் பிள்ளைகள் வளரவளர அப்பாவைப்பார்க்க ஆசைப்பட்டார்கள். ஆனால் அவரால் அங்கு போக முடியாதே! ஆனால் பணம் மட்டும் அனுப்பமுடிந்தது. இப்படியே எட்டு வருடங்கள் ஓடிவிட்டன.இப்போது அவனுக்கு ஒருவதிவிட அனுமதியும் கிடைத்தது. இந்தமுறையாவது தான் தாயகம் சென்று தன்மனைவி, மக்களுடன் தைப்பொங்கலைச் சிறப்பாக கொண்டாடவேண்டும் என்று ஊருக்குச் சென்றான்.

அங்கு தனது மனைவி, மக்களுடன் கோலாகலமாக தைப்பொங்கலைக் கொண்டாடினான். அயலவர் பார்த்து ஆச்சரியப்படும்படி அப்படிக் கொண்டாடினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளுக்கோ இத்தனை வருடத்தின்பின் அப்பா வந்து இப்படிச் சிறப்பாகக் கொண்டாடியது பெரு மகிழ்ச்சியைக் கொடுத்தது. அன்று இரவு மாதவன் மிகவும் களைத்துவிட்டான். பிரயாணக்களைப்பு ஒருபுறம் விட்டில் தைப்பொங்கல் கொண்டாட்டம் ஒருபுறம் இருந்தாலும் பிள்ளைகளுடன் இருந்து கதைத்துச் சிரித்துவிட்டு அவர்களுக்குக் கொண்டு வந்த சாமான்களைக் கொடுத்துவிட்டு மனைவியிடம் கொண்டு வந்த பணத்தையும் கொடுத்துவிட்டுப் படுக்கைக்குச் சென்றான். காலையில் பிள்ளைகள் எழும்பிவிட்டனர். அம்மா எழும்பிப் பிள்ளைகளுக்குச் சாப்பாடு செய்து விட்டு, அப்பா களைப்பில் நித்திரை கொள்ளுகிறார் என்று நினைத்து எழுப்பாமல் விட்டார்.

பிறகு என்ன இவ்வளவு நேரமாகியும் எழும்பவில்லையே எனப்போய்ப் பார்த்தபோது. அவர் உணர்வற்று இருப்பதைக்கண்டு, அலறித்துடித்து எழுப்பினாள். மாதவன் எழும்பவில்லை. அவள் கத்தியசத்தத்தில் பிள்ளைகள் பயந்துவிட்டனர். பக்கத்து வீட்டுமாமி வந்துபார்த்துவிட்டு. ஒருவாடகைகாரில் அவனை ஏற்றி வைத்தியசாலைக்குக் கொண்டுசென்றனர்.அங்கு அவனைப் பரிசோதித்த வைத்தியர் அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாகக் கூறினார். இதைக்கேட்டு அவன்மனைவி மயக்கமடைந்தாள்.

பிறகென்ன அவனது ஈமகிரியைகள் நடந்தது. உடலும் எரிக்கப்பட்டது. அத்துடன் அவனது கடமை முடிந்தது என நினைத்தானோ சென்றுவிட்டான். ஆனால் மனைவி மக்கள் தைப்பொங்கல் வரும் காலை பொங்குவது இல்லை, கொண்டாடுவது இல்லை. தைப்பொங்கலுக்குப் பதிலாக கண்ணீர் பொங்குகிறார்கள். இது ஒரு குட்டிக்கதை. இருந்தாலும் இறைவன்படைப்பில் எத்தனை விசித்திரங்கள். வாழ்வு என்பது ஓட்டப்பந்தயம். அதை யார் ஓடிமுடிப்பர். முடிவில் யாவரும் செல்வது ஒரு இடமே இதை உணருவோர் வாழ்வில் எல்லாம் நலமே!

- - - - - - - - - - - - - - - - -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலர் தினம் எப்படி வந்தது?........

திருமதி ஜெயா நடேசன்
யேர்மனி

காதல்?........கா- காத்திருந்து, த- தவித்திருந்து, ல் - இல்லாமல் போவதுதான் காதல். ஒரு ஆணும் பெண்ணும் நட்புக்கொள்ளும்போதுதான் காதல் என்பது உருவாகின்றது. காதல் என்பது கொடுமையானதோ?.. அல்லது கெடுதியானதோ அல்ல "காதல் அன்றேல் சாதல்." காதல் புனிதமானது. மனிதனைத் தெய்வமாக்கும். இன்று உலகளவில் காதலுக்கு ஒரு தினத்தையே உருவாக்கியுள்ளனர். மாசி மாதம் 14ம் திகதி உலகளவில் காதலர்தினம் கொண்டாடப்படுகின்றது. இந்தக் காதலர் தினம் வந்தது எப்படி?...

பொதுவாகக் காதலுக்கும் காதலர்க்கும் முக்கியமான தினம் காதலர் தினம் என்றாலும் இது ஓர் துக்க தினம் என்றும் கூறுவதுண்டு. காரணம் பெப்ரவரி 14ம் திகதி வலண்டையின்ஸ் தினத்தைக் காதலர் தினம் என்றுதான் கொண்டாடுகிறார்கள். இதில் வலண்டையின் என்பவர் ஒரு பாதிரியார். இவரை நினைவு படுத்துதவற்காகவே இந்த நாள் உண்டானது. கி.பி 20ம் நூற்றாண்டின் மத்தியில் ரோம் நகரை ஆட்சிசெய்த கிளாடியஸ் மன்னனின் காலத்தில் மக்கள் இராணுவத்தில்சேர மறுத்தனர். இதற்கெல்லாம் அவர்கள் குடும்பமாகவும் காதல்ச் சோடிகளாகவும் இருப்பதுதான் காரணம் என்று எண்ணி அம்மக்களுக்குத் திருமணம் செய்துகொள்வது பற்றித் தடை விதித்தான் அரசன்.

இதனை எதிர்த்த பாதிரியார் வலண்டைன் இரகசியமாகத் திருமணங்களைச் செய்து வைத்தார். இதனை அறிந்த மன்னன் அவரைச் சிறையில் அடைத்து வைத்து கி.பி 270ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14ம் திகதி பாதிரியாரை கொடூரமாகக் கொலை செய்தான். இதற்காகவே இந்நாளை வலண்டையின்ஸ் தினம் என அப்போதிருந்த போப்பாண்டவர் கிளாசியஸ் கி.பி 498ம் ஆண்டில் அதிகாரபூர்வமாக அறிவித்தார்.

அரசனால் கொலை செய்யப்பட்ட புனித வலண்டையின்ஸ் இங்கிலாந்திலும் பிரான்சிலும் நினைவு கூருவார்கள். இவற்றுடன் பண்டைய ரோமில் பெப்ரவரி என்பது வசந்த காலத்தின் ஆரம்பமாகவும் தூய்மைப்படுத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதமாகவும் கணிக்கப்படுகின்றது. இதில் 15ம் நாள் விவசாயக்கடவுள் என மதிக்கப்படும் வீனஸ் என்னும் தெய்வத்துக்கான விழா கொண்டாடப்பட்டது. அதனாலும் இத்தினம் வலண்டையின்ஸ் தினமாக மாறியிருக்கக்கூடும் எனவும் ஒரு கதை உண்டு. எப்படியாக இருந்தாலும் காதலுக்கும் காதலர்களுக்கும் ஒவ்வொரு நாட்டிலும் தனி முக்கியத்துவம் வழங்கப்பட்டு இத்தினம் சிறப்பிக்கப்படுகின்றது. ஆனாலும் சில நாடுகளில் வெவ்வேறு தினங்களில் பல காரணங்களைக்கொண்டு கொண்டாடப்படுகின்றது.

காதலர் தினம் கொண்டாடாவிடில் காதல் வளராது, காதல் செத்துவிடும் என்று அர்த்தமில்லை. காதலைக் காதலாகவே மதிப்பவர்களே காதலர்கள். காதலைக் காமமாக மாற்ற முனைபவர்கள் காமுகர்கள் என்று சொல்லலாம்.. காதல்புரிவது எந்தத் தவறு என்று எந்தத் தமிழ் இலக்கியமோ...பெரியோர்களோ கூறவில்லை. காதல் பற்றிச் சங்க இலக்கியங்கள் திருக்குறளில் காமத்துப்பால் என்பன கூறியுள்ளன.

இலக்கியவாதிகளின் கருத்து "காதலைக் காதலாக மதித்துக் காதல் செய்வது தவறில்லை" உண்மையான காதலை அன்பைப் பகிர்ந்துகொள்வதுதான் காதலர் தினம். பரிசுகள் பலதும் கொடுத்து அதாவது 20ம் நூற்றாண்டில்தான் வாழ்த்துமட்டை பரிசளிப்பதும், சிவப்பு றோசாப்பூக்கள் கொடுப்பதும், சொக்லேட் பகிர்வதும் என காதலர்களுக்கென அமைத்துக் கொடுக்கும் தினமாக மாறியது. பரிசில்கள் கொடுத்துத்தான் காதலை வெளிப்படுத்த வேண்டும் என்பதல்ல... அன்பை வெளிப்படுத்துவதே உண்மைக் காதலாகும். உண்மையான அன்புடன் காதலிக்கும் காதலர்களுக்கும் எல்லாத்தினமும் காதலர் தினம்தான்.

சீனாவில் யூலை 7ம் திகதி "ஏழின் இரவு" என்று இந்தக் காதலர் தினம் கொண்டாடப்படுகின்றது. யப்பானில் பெப்ரவரி 7ம் திகதி கொண்டாடப்படுகின்றது. யூத மரபின்படி ஆகஸ்ட் 15ம் திகதி வெள்ளை ஆடை அணிந்து காதலியர்கள் நடனம் ஆடுவதில் காதலர்தினம் கொண்டாடுவர். கொலம்பியாவில் செப்டெம்பர் 3ம் திகதி வெள்ளி-சனி நாட்களில் இதை ஒரு நட்புதினமாகக் கொண்டாடுவர். பின்லாந்தில்"ரகசிய சிநேகிதனே" என நண்பர்கள் விழாவாகக் கொண்டாடுவர். நம் மக்களும் தற்போது இந்த நாளைக் கொண்டாடிவருவதும் சிறப்புத்தான்!....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலந்தோறும் தமிழ்க்காதல்!....

(கௌசி-யேர்மனி)




விழியில் விழுந்து இதயம் நுழைந்து உயிரில் கலந்த உறவு என்று காதலுக்கு அழகான வரிவடிவம் தந்திருக்கின்றார் கவிஞர் வைரமுத்து. காதல் இல்லாது வாழ்க்கை ஏது! உறவுகள் ஏது! ஏன உலகுதான் ஏது! வாழ்க்கை வட்டத்திலே உண்மையும், அழகும், அபூர்வமும், அற்புத உணர்வும் ஏற்படுத்தும் ஒரு உணர்வு உண்டென்றால், அதுகாதலே! மனிதன், விலங்குகள், பறவைகள் உயிர்கள் அனைத்திலும் இழையோடிக் காணப்படும் இவ்வுணர்வு வாழ்க்கை முழுவதும் தேவையானதாகவும் அகற்ற முடியாததாகவும் பெற்றோரின் பாசம் போல் தொடர்ந்துவரும் உணர்வாகவும் விளங்குகின்றது. காதல் என்றவுடன் காத்திருக்காமல் எங்கள் முன்னே தென்படும் தாஜ்மஹாலும், வடமொழிக்காதல் மீராவும், தமிழ்மொழிக்காதல் ஆண்டாளும் ஆண்டாண்டுக் காலமாகக் காதலுக்கு அடையாளங்களாகக் காணப்படுகின்றனர்.

கல்லும் மண்ணும், கடலும், மலையும், உலோகங்களும் எனத்தொடரும் இயற்கை வனப்புக்களை அழகுசெய்ய இரத்தமும் சதையும் கொண்டு உணர்வுகளுடன் நடமாடிய மனிதன் தோன்றக்காரணமான உணர்வாக இதுகாணப்படுகின்றது. அதனாலேயே காதல் முதலில் சங்ககாலத்தில் காமமாகவே சொல்லப்பட்டது. ஒத்த அன்பினராகிய ஒருவனும் ஒருத்தியும் உடலாலும் உள்ளத்தாலும் இணைந்து தமக்குள் இன்பந்துய்த்து வாழ்தல் என்று காதல் பற்றி நச்சினார்க்கினியார் அழகான விளக்கம் தந்துள்ளார். இவ்வுணர்வினை சங்கப்பாடல்கள் உணர்த்திய அளவு வேறு எக்காலத்துப்பாடல்களும் உணர்த்தவில்லை என்றுதான் குறிப்பிடவேண்டும். தற்காலப்பாடல் களில்கூட சங்கப்பாடல்களின் தாக்கத்தினை அதிகமாகக் காணக்கூடியதாகவுள்ளது. காதலும் வீரமும்கலந்து கிடந்த சங்ககாலத்திலே அகத்திணைப் பண்புதழுவிய காதல்பாடல்கள் மனதுக்குள் இனிமைபயப்பனவாகக்காணப்படுகின்றன. செம்புலப்பெயல் நீரார் எனப்படும் புலவர் குறுந்தொகையிலே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"யாயும் ஞாயும் யாராகியரோ
எந்தையும் நுந்தையும் எம்முறைக்கேளிர்
நீயும் யானும் எவ்வழி அறிதும்
செம்புலப் பெயல் நீர்போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந்தனவே"

உன்தாயும் என்தாயும் யாரோதெரியாது? எனதுதந்தையும் உன்தந்தையும் எவ்வகையிலும் உறவினர்கள் இல்லை. நீயும்நானும்கூட இதற்கு முன்னர் அறிமுகமானவர்கள் இல்லை. ஆனால், செம்மண்ணில் மழைநீர் கலந்தால், அந்நீரும் செந்நீராய் கலத்தல் போல நம் இருவர் நெஞ்சங்களும் ஒன்றாகக் கலந்துவிட்டன என கீழ்க்குறிப்பிட்டபாடலிலே காதலின் சிறப்பைப் புலவர் விளக்கும் பாங்கானது காதலுக்கு முகவரி தேவையில்லை. உறவுகள் பார்ப்பதில்லை. இரண்டு இதயங்கள் மட்டுமே போதுமானது இரண்டறக்கலப்பதற்கு என்பதைத் தெள்ளத்தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது.

குறுந்தொகையிலே தலைவியின் நலத்தினைப் பாராட்டித் தலைவன் ஒருவண்டினைப் பார்த்துக் கேட்பதாக இறையனார் படைத்திருக்கும் இப்பாடலிலே,
"கொங்குதேர் வாழ்க்கை அம் சிறைத்தும்பி!
காமம் செப்பாது, கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇயநட்பின், மயில்இயற்
செறிஎயிற்று அரிவைகூந்தலின்
நறியவும் உளவோ? நீஅறியும்பூவே"
அதாவதுபூக்களிலே இருக்கின்ற தேனை ஆராய்ந்து உண்ணுகின்ற பண்புடைய அழகிய சிறகினைப் பெற்றவண்டே! உண்மையைச் சொல்மயில் போன்ற மென்மையும், வரிசையான பற்களும் கொண்ட என்தலைவியின் கூந்தலைக் காட்டிலும் நறுமணம் கொண்ட பூவைநீ அறிந்ததுண்டா என்று பாடுகின்றார். உலகின் எத்தனை சிறப்புக்கள் இருந்தாலும் அவை அத்தனையும் காதலியின் கால்தூசுக்குச்சமம் என எண்ணத்தோன்றும் மயக்கத்தை ஏற்படுத்தும் தன்மை காதல் உணர்வுக்கு உண்டு.

மறைவாய்க் காதலித்து, யாரும் அறியாது உடன்போக்காய் உற்றார், சுற்றம் துறந்து, வசதி வாய்ப்புக்களை உதறித்தள்ளி காதலனேதுணை. அவனன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு எதுவுமே தேவையில்லை என்று எண்ணத்தோன்றும் உணர்வு காதலுக்கு மட்டுமே உள்ளது. இந்த உணர்வினைச் சித்தரிக்கும் ஒரு குறுந்தொகைப்பாடலினை கூடலூர்கிழார் பாடியிருக்கின்றார்.

"முளிதயிர்பிசைந்த காந்தள் மெல்விரல்
கழுவுறு கலிங்கங்கழா அதுடீஇக்
குவளையுண் கண் குய்ப்புகைகழமத்
தான்று ழந்தட்ட தீம்புளிப்பாகர்
இனிதெனக் கணவனுண்டலின்
நுண்ணிதின் மகிழ்ந்தன் றொண்ணுதன்முகனே"

தமை விட்டுப்பிரிந்து சென்ற மகள் தன்காதலனுடன் எப்படிவாழ்கின்றாள் என்று அறிந்துவரும்படி செவிலித்தாயிடம் கூறி நற்றாய் அவளை அனுப்புகின்றாள். அதைப் பார்த்து வந்து செவிலித்தாய் கூறியவார்த்தைகளே இப்பாடலிலே எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. புளித்த தயிரை காந்தள் விரல்களால் பிசைந்து, தாளிதம் செய்யும்போது அதுகருகிவிடாது பட்டுச்சேலை முந்தானையிலே கைகளைத் துடைத்துவிட்டு தாளிதத்தை முறையாகச்செய்து சமைத்தஉணவினை கணவனுக்கு இடும்போது அவனும் இனிமை, இனிமை என்றுசொல்லி உண்டான் என்று நற்றாயிடம் கூறுகின்றாள்.

காதலனின் சுவைக்காகவும் மகிழ்வுக்காகவும் தன்னை முழுவதுமாக அர்ப்பணிக்கக் கூடிய தன்மையை ஒரு பெண்காதல் வசப்படும் போது பெற்றுக்கொள்கின்றாள். இதற்காகப் பல்கலைக்கழகமோ, கல்லூ ரியோ சென்று கற்கவேண்டும் என்றதேவையில்லை. எமக்குள்ளேயே சுரந்து,எமக்குள்ளேயே தொடர்ந்து,வேளைவரும் போது வெளிப்படும் இக்காதல் உணர்வு இப்பிரபஞ்சத்தின் பெருமைமிக்க சக்தியாகக்காணப்படுகின்றது.

சங்கம் மருவியகாலத்தில் தோன்றிய ஐந்திணை ஐம்பது என்னும் நூலிலே காதலின் தியாகத்தினை ஒரு அழகானபாடல் மூலம் மாறன்பொறையனார் எடுத்துக்காட்டியுள்ளார்.

"சுனைவாய்ச் சிறுநீரை எய்தாதென்(று) எண்ணியப்
பிணைமான் இனி துண்ண வேண்டிக ' கலைமான்தன்
கள்ளத்தின் உச்சும் சுரமென்பார்காதலர்
உள்ளம் படர்ந்தநெறி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சுனைவாய்ச் சிறுநீரை எய்தாதென்(று) எண்ணியப்
பிணைமான் இனிதுண்ணவேண்டிக் கலைமான்தன்
கள்ளத்தின் உச்சும் சுரமென்பார் காதலர்
உள்ளம் படர்ந்தநெறி"

சுனையிலே சிறிதளவு நீரேயுள்ளது. ஒருமானே அருந்தும் அளவுள்ளது. ஆண்மான் குடிக்காதுவிட்டால் பெண்மான் குடிக்காது. எனவே ஆண்மான் சுனைநீரில் குடிப்பதுபோல் வாயைவைத்துப் பாவனைசெய்து பெண்மானைக் குடிக்கச் செய்கிறது. காதலிலே விட்டுக்கொடுப்புக்கள், தியாகங்கள், அன்புப்பரிமாற்றங்கள் அளவுக்கதிகமாகவே பேணப்படுகின்றன.

பல்லவர்காலத்துத் தோன்றிய ஆண்டாள் பாடல்களிலே ஒரு தலைக்காதல் அற்புதமாகப் படம்பிடித்துக் காட்டப்பட்டுள்ளன. திருநாவுக்கரசர் சிவபெருமானை தலைவனாகவும் தன்னைத் தலைவியாகவும் கொண்டு பலபாடல்கள் பாடியுள்ளார்.

சோழர்காலத்தில் புகழேந்தி, சயங்கொண்டார், கம்பர், ஒட்டக்கூத்தர் போன்றோர் காதல் சுவைமிக்க பாடல்கள் மூலம் காதல் உணர்வுகளை படம்பிடித்துக்காட்டியுள்ளனர். அதேபோல் புகழேந்தி நளவெண்பாவிலே நளன் தமயந்தி மேல் கொண்டகாதலினை அழகாக எடுத்துக்காட்டியுள்ளார்.

நாயக்கர்காலத்திலே குற்றாலக் குறவஞ்சியில் திரிகூடராசப்பக்கவிராயர்

வாகனைக்கண்டுருகுதையோ - ஒரு
மயக்கமதாய்வருகுதையோ
மோகம் என்பது இதுதானோ - இதை
முன்னமே நான் அறியேன்! ஓ!
ஆகம் எல்லாம் பசந்தேனே - பெற்ற
அன்னை சொல்லும் கசந்தேனே
தாகம் அன்றிப்பூணேனே - கையில்
சரிவளையும் காணேனே.

எனகாதலினால் ஏற்படும் உணர்வுகளைக் கொண்டுவந்திருக்கின்றார்.

தற்காலக் கவிஞர்களின் அற்புதமான கவிவரிகள், காதலை வெகுவாக வெளிப்படுத்தியுள்ளன. கவிஞர் மீரா அவர்கள் ஓரிடத்தில் அற்தமான புதுக்கவிதையினைத் தந்துள்ளார்.

"ஒருமுறை நீ என்னைப்பார்த்தாய்
நெஞ்சில் முள்குத்தியது
முள்ளை முள்ளால் தானேஎடுக்கமுடியும்
மீண்டும்ஒருமுறைஎன்னைப்பார்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றறியாத பாமரர்கள்கூட நாட்டுப்பாடல்கள் மூலமாகத் தமது காதலை வெளிப்படுத்தியிருக்கின்ற பாங்கு ரசித்து இன்புறவைப்பதுடன் இளைஞர்கள் உள்ளத்தில் காதல் என்னும் பயிருக்கு விதை ஊன்றுவதாகஉள்ளன.

"கண்டாங்கி பொடவைகட்டிக்
கைநிறையக் கொசுவம் வச்சு
இடுப்பில சொருகிறியே முனியம்மா அது
கொசுவம் அல்ல எம் மனசு முனியம்மா"

முண்டாசுக்கவி பாரதி கூட காதல் காதல் காதல். காதல் போயில் சாதல் சாதல் சாதல் என்றார். ஆனால், மனிதன் தோன்றியது தொடங்கி தொடர்ந்து வரும்காதலுக்கு எதிர்ப்புகளும் தொடர்வது இயற்கையாகவே ஏற்படுகின்றது. மரபுகள், கலாச்சாரம், சாதி, மதம், என மனிதனால் உருவாக்கி வைக்கப்பட்ட கட்டுக்கோப்புக்கள் காதலுக்குத் தடைபோடுகின்றன. முறைதவறிய காதலினால் தமது வாரிசுகள் வாழ்க்கை முறை தவறிப்போய்விடுமோ என்று அஞ்சுகின்றனர். இயல்பாகவே தோன்றுகின்ற மகிழ்ச்சியை இடையிலே முறிக்க முயற்சிக்கின்றனர்.

நாடகத்தில் காவியத்தில் காதலென்றால்
நாட்டினர் தாம் வியப்பெய்தி நன்றாம் என்பர்
ஊடகத்தே வீட்டினுள்ளே கிணற்றோரத்தே
ஊரினிலே காதலென்றால் உறுமுகின்றார்
பாடைகட்டி அதைக்கொல்ல வழிசெய்கின்றார்
பாரினிலே காதலென்னும் பயிரைமாய்க்க

என்று தற்போதைய நிலமையினை பாரதிதாசன் தன்பாடல் வரிகள் மூலம் அழகாக எடுத்துக்காட்டியுள்ளார்.

பகட்டுக்காகவும், பொழுதுபோக்குக்காகவும், எதிர்காலசிந்தனை எதுவுமின்றி விளையாட்டாக காதலென்னும் போர்வையில் பெண்கள் ஆண்களையும், ஆண்கள் பெண்களையும் ஏங்கவைத்து ஏமாற்றும் காதல், காதலுக்கே ஒரு அவமானமாகக் கருதப்படுகின்றது. எனவே காதல் செய்வீர்! காதல் செய்வீர்! காலம் முழுவதும் இணைந்திருக்க கருத்தில்கொண்டு, உண்மை அன்பை முதலீடுசெய்து, வாழ்வில் முயன்று காதலில் வெற்றிகாண்பீர்!

-அனைத்து உள்ளங்களுக்கும் காதலர்தின வாழ்த்துக்கள்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம் [AROD] நிதி சேகரிப்புக்கான திட்டம்




முன்னுரை

வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கம் 1990 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது. ஆரம்பித்து வைக்கப்பட்ட காலத்திலிருந்தே மாற்றுவலுவுள்ளோர் தமது சொந்தக்காலில் நின்று தங்களை முன்னேற்றுவதற்காக அர்பணிப்புடன் செயல்படுகிறது. AROD நிறுவனம் மாற்றுவலுவுடைய சிறுவர்கள் மற்றும் வளர்ந்தவர்கள் தமது வாழ்க்கையை மிக அர்த்தமுள்ளதாக உருவாக்குதல், சுயமாக வருமானம் ஈட்டுதல், உற்பத்தி அதிகரிப்புக்கான உதவி, மற்றும் சிறப்பான சமூக ஒருமைப்பாட்டை அடைவதனை இலக்காகக் கொண்டுள்ளது.

கடந்த காலங்களில் பல்வேறுபட்ட இடர்கள் குறிப்பாக பல தசாப்தங்கள் நிலவிய உளநாட்டு யுத்தம், பாரிய இடப்பெயர்வுகள், அமைதியின்மை போன்ற காரணிகளுக்கு மத்தியிலும் AROD தொடர்ந்து 27 ஆண்டுகள் தனது சேவையை நிறைவு செய்திருக்கிறது. மாற்றுவலுவுடையோர் நலன் கருதி தங்களைப் போன்ற நல்ல உள்ளம் கொண்ட ஆதரவாளர்கள் உதவியுடன் எமது நிறுவனம் இடப்பெயர்வுடன் இடம்மாறினோமே தவிர ஒரு தடவை கூட மூடப்படவில்லை.

தொடர்ந்தும் பல்வேறுவகையான சுயதொழில் பயிற்சிகள் வழங்குதல், மிகத் தேவையான மாற்று வலுவுள்ளவர்களுக்கு மாதாந்த உதவுதொகை வழங்குதல், சுயதொழில் கடன்வசதி செய்தல், வலுவிழந்தவாக்ளின் அவசிய தேவைகள் கருதி சக்கர நாற்காலி, முச்சக்கர வண்டி, நடக்கும் சட்டம், ஊன்றுகோல், விசேடமான கொமோட், யாழ் மருத்துவமனைக்கான இயன் மருத்துவ சேவை உதவி, வெள்ளைப் பிரம்பு, விழிப்புலனற்றவர்களுக்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரையில் பேப்பர் மற்றும் இதர வசதிகள், மற்றும் குறிப்பாக மிதிவெடியால் பாவிக்கபப்ட்டவா்களுக்கு சமுக அடிப்படையிலான மறுவாழ்வு போன்ற சேவைகளை வழங்கி வருகிறது.

காணி கொள்வனவு கட்டிட நிர்மானம்

2011ம் ஆண்டு AROD நிறுவன ஆரம்ப காலத்தலைவரும் எமது காப்பாளருமாகிய Dr.சண்முகலிங்கம் அவர்களது மகள் திருமதி நந்தினி குணராஜா அவர்கள் 47/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலியில் அமைந்துள்ள தனது இல்லத்தை குறைந்த விலையில் எமது நிறுவனத்துக்கு தந்து உதவினார். அத்துடன் Dr. சண்முகலிங்கமும் அவரது மகன் திரு விக்னராஜா சோமேஸ் அவர்களும் இல்லத்துடன் இணைந்த காணியை இலவசமாகவே தந்து உதவினார்கள்.

வலுவிழந்தவர்களின் வாழ்வை மேம்படுத்தவும் எமது நிறுவனத்தின் எதிர்கால திட்டங்களை விரிவுபடுத்தவும் எமது தற்போதைய இல்லத்தின் இட அளவு போதாதுள்ளது. இதனால் நாங்கள் பல நல் உள்ளங்களின் உதவியுடன் மூன்று மாடிக் கட்டிடம் ஒன்றை பின்வரும் தேவைகள் கருதி உருவாக்கி வருகிறோம். 1. சுய தொழில் பயிற்சிகளை விரிவுபடுத்தல் (Expanded training center for Disabled) 2. மாற்றுவலுவுள்ளவர்களின் உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்தும் நிலையம். (Sale Center) 3. இயன் மருத்துவ சேவை நிலையம் (Physical Rehabilitation Center) 4. மாற்றுவலுவுள்ளவர்களின் வசதிகளுள்ள வேலைத்தளம். (Better work place for the Disabled) 5. வினைத்திறனுள்ள இடவசதி கூடிய அலுவலக வசதி. (Better office accommodation) 6. அலுவலகம் ,வேலைத்தளம் இடமாறுவதன் மூலம் விடுதி வசதிகளை விரிவுபடுத்தல். (Expanded hostel accommodation) 7. வலுவிழந்தோருக்கான விழா மண்டபமும் கலந்துரையாடல் மண்டபமும். (Conference hall & Recreation facility for the Disabled)

AROD நிறுவனம் இலாப நோக்கற்ற வலுவிழந்தோர் நலன் சார்ந்த ஒரு நிறுவனம். பெரும்பாலான எமது தேவைகளுக்கான பணம் - பொருட்கள் உங்களைப் போன்ற நலன்விரும்பிகளால் மாத்திரமே கிடைக்கப்பெறுகிறது. எமது மூன்று மாடிக்கட்டட அடிப்படை கட்டட வேலைகள் முடிவுற்றுள்ள நிலையில் நாங்கள் எதிர்வரும் பெப்ரவரி 2018ல் முதலாம் மாடியைத் திறந்து வைக்க உத்தேசித்துள்ளோம். திறப்பு விழாவுக்கு முன் மேலதிகமாக பின்வரும் அவசியமான வேலைகளை முடிக்க வேண்டியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விபரங்கள் (ஒவ்வொரு மாடிக்கும் தனியாக) தேவையான தொகை (ரூபா)**

| | | |
|---|---|---|
| 1 | றெராசோ போடுதல் (Terrazzo flooring) | 750,000.00 |
| 2 | கதவுகள் , யன்னல்கள் , றோலர் கதவு உட்பட (Windows & doors for each floor including roller doors for first floor) | 700,000.00 |
| 3 | மின்சார உபகரணங்கள் பொருத்துதல் Exhaust fan உட்பட | 300,000.00 |
| 4 | மாற்றுவலுவுடையோர் மலசலகூடம் (Disabled wash rooms) | 300,000.00 |
| 5 | வர்ணம் பூசுதல் (Painting) | 200,000.00 |
| 6 | வலுவிழந்தோர் பயணிக்கும் ramp பாதுகாப்பு வசதி (மூன்று மாடிக்குமானது) (Railings for Access Ramp) | 500,000.00 |
| 7 | Partitioning விற்பனை நிலையம், பயிற்சி நிலையம் அலுவலகம்; Partitioning for Sales centre, Training Center & Office | 500,000.00 |
| 8 | விற்பனை நிலையம், அலுவலக தளபாட வசதிகள் | 500,000.00 |
| 9 | Furnishing Sales centre and Office 9 மின்தூக்கி (Lift) | 500,000.00 |

தற்போது எங்களிடமுள்ள பணவசதி மேற்குறிப்பிட்ட தேவைகளை நிறைவு செய்வதற்கு போதாத நிலையில் நாங்கள் உங்களைப்போன்ற சமூக அக்கறை கொணட் குறிப்பாக வலுவிழந்தவர்களின் வாழ்க்கையை மேம்படுத்தும் அக்கறை உள்ளவர்களிடம் வேண்டி நிற்கின்றோம். நீங்கள் உங்களது நன்கொடைகளை உங்களது அன்புக்குரியவர்களின் நினைவாகவும் அளிக்கலாம். நன்கொடைகள் பணமாகவோ அல்லது பொருளாகவோ இருக்கலாம். மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு தேவைகளுக்குமான தொகையை உங்களால் வழங்கமுடியாவிட்டால் நீங்கள் பகுதியாகவும் பங்களிக்கலாம். நீங்கள் செலுத்தும் சிறிய தொகை கூட வலுவிழந்தவர்களின் வாழ்வை மேம்படுத்தும்.

AROD நிறுவன வங்கிக் கணக்கு விபரங்கள்

வலுவிழந்தோர் புனர்வாழ்வுச்சங்கம் நடைமுறைக்கணக்கு இலக்கம் : 1060013113 வங்கியின் பெயரும் விலாசமும் : கொமர்சல் வங்கி யாழ்ப்பாணக் கிளை [Commercial Bank, Jaffna Branch] 474, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் , இலங்கை SWIFT Code: CCEYLKLX

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் நிறுவனத்திற்கென வங்கியில் பணம் வைப்புச்செய்யும் போது தயவு செய்து பின்வரும் தொலைபேசி இலக்கங்கள் மூலமாகவோ (94 21 221 5925 ,94 21 321 7718) அல்லது மின்னஞ்சல் மூலமாகவோ (arodinjaffna@gmail.com) தெரியப்படுத்துங்கள். இது எங்கள் கணக்கு சரிபார்த்தலுக்கு மிகவும் உதவியாக இருக்கும்.

இலங்கையில் கொமர்சல் வங்கியின் எந்தக் கிளையிலும் உங்கள் நண்பர்கள் உறவினர்கள் மூலம் பணம் வைப்புச் செய்ய முடியும். அத்துடன் 47/2 ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு யாழ்ப்பாணத்திலுள்ள எமது நிறுவனத்தில் நேரடியாகவும் வழங்கமுடியும். நீங்கள் வழங்கும் பணம் மிகக்கவனமாக வலுவிழந்தவர்களுக்காக செலவு செய்யப்பட்டு கணக்கிடப்படும் என்பதை நாங்கள் உறுதிப்படுத்துகிறோம். அத்துடன் உங்கள் பணமோ , பொருளோ பெற்றுக் கொணட்தற்கான பற்றுச்சீட்டு தங்களுக்கு உடனடியாக வழங்கப்படும்.

எங்கள் நிறுவனம் உங்களை அன்புடன் வரவேற்கிறது. தயவு செய்து இந்தத் தகவலை உங்கள் நண்பர்கள் உறவினர்களுக்குப் பகிர்ந்து வலுவிழந்தவர்களுக்கு உதவுவீர்கள் என்று நம்புகின்றோம். வலுவிழந்தவர்களுக்கான செயற்திட்டங்களில் நீங்கள் காட்டும் அக்கறைக்கு அவர்கள் சார்பில் நன்றி தெரிவித்துக்கொள்கின்றோம் வலுவிழந்தோர் சேவையில்

Dr.ந.சிவராஜா MBBS, DTPH,MD,MCCPSL - **தலைவர்.**
University of Jaffna & Former Consultant WHO
Former Head/Department of Community Medicine
Phone – + 94 0777562715 . Mail id – nsivarajah@gmail.com

**திரு.க.கோபாலகிருஸ்னன்** BA,B.Phil.M.A.ED-**செயலாளர்**
Former Principal Nuffield School for Deaf & Blind
Phone – + 94 0777579321. Mail id –nanthakumarankanagarajah@gmail.com

**திரு.கோ.தியாகராஜா -பொருளாளர்**
(Retired Postmaster)
Phone +94 0775393747



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும்கல்விச்செலவுகளைப் பொறுப்பேற்றுஉதவும் மனிதநேயப்பணிகளில் மண் சஞ்சிகையோடு இணைந்து கரம்கொடுத்துவரும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம். எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்துஉதவலாம்.இதுவரை இத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

01. திருமதி.சிவதர்சினி.பிராங்ளின் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - வவுனியா) - 480-00Euro
02. திரு,திருமதி.யஜிந்தா.ராஜ்மோகன் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - மட்டக்களப்பு - 480-00
03. செல்வன்.விஷ்ணு,செல்வி.பவுத்ரா.விஜயகௌரிசுவீஸ்லாந்து
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - கிளிசொச்சி - 480-00
04. செல்வன்.நகுல்.துரையரங்கன் - ஜேர்மன்
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - திருகோணமலை-480-00
05. செல்வி.அஜந்தி.அழகராசா - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - வவுனியா - 480-00
06. திருமதி.பராசக்தி.பரமசாமி - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - வவுனியா - 480-00
07. திருமதி.ரதி.சின்னத்துரை - பிரித்தானியா
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - வவுனியா - 480-00
08. திருமதி.பிரிந்தாவனி.ஏகானந்தராசா - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - வவுனியா - 480-00
09. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த முழுச்செலவு - வவுனியா - 480-00
10. செல்விகள்.வினிஷா.இராஜ்குமார்,தீபா.தர்மராசா-ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு - மட்டக்களப்பு - 240-00
11. செல்வி.சுகிர்தா தவராஜ் - ஜேர்மனி
((ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு - கிளிநொச்சி - 200-00
12. செல்வன். சியாந்த எமில் சர்வானந்தன் - ஜேர்மனி
(ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு - வவுனியா - 200-00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு

ஆரம்ப இருப்பு 01-011-2017(மேலதிகச்செலவு) - 61-90

அன்பளிப்புகள்:-

01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

02. திருமதி. பராசக்தி. பரமாமி - London + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

03. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)

04.திருமதி அஜந்தி பத்மநாதன் - London + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)

05. திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Weeze + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

06. செல்விகள்.வினிஷா.இராஜ்குமார்,தீபா.தர்மராசா- Gottingen
(ஒரு பிள்ளையின் வருடாந்த கல்விச்செலவு அன்பளிப்பு) + 100-00

07. திருமதி. சாந்தினி துரையரங்கன் - Essen + 480-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற வருடாந்த அன்பளிப்பு)

08. திரு.சிவகுமாரன் சாந்தலிங்கம் - Pforzheim + 20-00

09. செல்வி லாவண்யா அற்புதராசா - Soest + 50-00
(பிறந்தநாள் அன்பளிப்பு)

--------

+ 988-10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

+ 988-10

**அனுப்பியது:-**

சிறீ அகிலாண்டேஸ்வரி அருளகம்

சிறுவர் காப்பகம் - வவுனியா - 960-00
வங்கிக்கட்டணம் - 35-00

-------

995-00

-வங்கிவரி 01.11.2017 -30.11.2017 - 9-76
01.12.2017 -31.12.2017 -14-08
----- 23-84

-------

-1018-84 - 1018-84

------------

**31-12-2017 மீதி கையிருப்பு** (மேலதிகச்செலவு) - 30-74

------------

## 2017ம் ஆண்டில் அன்பளிப்பு 6.000-00 யூரோ......

மண் சஞ்சிகையால் நீண்டகாலமாக முன்னெடுக்கப்பட்டுவரும் தாயக ஆதரவற்றோர், வலுவிழந்தோர், அகதிகள், முதியோர் நலத்திட்டங்களுக்கு உதவும் பொருட்டு 2017ம் ஆண்டில் நிதியுதவிபுரிந்த அன்பர்களுக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். இப்பணம் 6.000-00 யூரோக்களையும் நேரடியாக இல்லங்களுக்கு அனுப்பி வைத்தோம் என்பதை வாசகர்களுக்குத் தெரியப்படுத்துகின்றோம். இத்திட்டத்திற்கு மேலும் உதவிசெய்ய அன்பு உள்ளங்கள் அனைவரையு கேட்டுக்கோள்வதுடன் உதவிக்கரம் கொடுத்துவரும் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். 2017ல் அனுப்பிய பணத்தின் விபரம்...

| இல்லத்தின்பெயர் | இடம் | தொகை |
|---|---|---|
| ரூத் மிஷன் | கிளிநொச்சி | 2.040-00 |
| சிறீசண்முகா பெண்கள் இல்லம் | திருகோணமலை | 480-00 |
| அன்பகம் | வவுனியா | 680-00 |
| அருளகம் | வவுனியா | 1920-00 |
| திருஞானசம்பந்தர் இல்லம் | மட்டக்களப்பு | 480-00 |
| யோகசுவாமி இல்லம் | மட்டக்களப்பு | 400-00 |
| **மொத்தம்** | | **6000-00** |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து அன்பகம் சிறுவர் இல்லம்
# Hindu Anpakam Children Home

Parentless Children Pity Rescue, Protect Them.

Manager
Mann (Erde) Magazine – Germany
An Windhovel – 18a
47249 Duisburg
Germany

தங்களால் 02.11.2017அன்று அனுப்பி வைக்கப்பட்ட கடிதம் கிடைக்கப் பெற்றோம். எமது இல்லச் சிறுமிகளான [illegible] 600 யூரோ (ரூபா 120,000) கிடைக்கப் பெற்றோம். நாங்களும் எமது இல்லச் சிறார்களும் மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம். தங்களது வாசகர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

மேலும் எமது இல்லச் சிறார்கள் மண் சஞ்சிகைக்காக [illegible] 50% [illegible]

[illegible] Level [illegible] 47 சிறுமிகள் [illegible]

[illegible]

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[redacted]

ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி [redacted]

**SRI AGILANDESHWARY ARULAHAM**

அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் திருக்கோவில்

ARULMIHU AGILANDESHWARY SAMETHA AGILANDESUVARAR THIRUKOVIL

Kovilkulam, Vavuniya, Sri Lanka
T.P : 0094 024 - 2221685
E-mail: arulaham@gmail.com

"[illegible]"
"May we protect tender hearted children with compassion"

Banker: Bank of Ceylon - Vavuniya A/C No. [illegible]

Reg No. NEP/PC/CCH/125

[redacted]

[illegible]
A.Thiyagarasa, President,
[illegible] Nagapoosani Amman Kovil

[redacted]

[illegible]
M.Sabanathan (Prop: [illegible] Rice Mill)

[redacted]

[illegible]
S.Ramamoorthy
Prop: [illegible] Rice Mill

[redacted]

[illegible]
A.Navaratnarajah, Trustee
Arulmihu Agilandeshwary Sametha Agilandeswarar Thirukovil

[redacted]

[illegible]
V.S.Thavarajah (Govt. Contractor)

[redacted]

[illegible]
S.Annalingam (Prop: Kugan Motors)

[redacted]

[illegible]
A.Umathasan (Prop: New Sun Rice Mill)
[illegible]
P.Murugavel (Prop: [illegible] Rice Mill)
[illegible]
S.Sripathmanathan (Prop: [illegible] Rice Mill)
[illegible]
N.Thanandralingam (Trader)
[illegible]
S.Suresh Kumar (Divisional Secretary)
[illegible]
T.Ramanathan
[illegible]
A.Sooriyakumar (Trader)
[illegible]
N.[illegible] (S.T.R)

[redacted]

[illegible]
R.Loganathan (Accountant)

November 9, 2017

[illegible]

மண் சஞ்சிகை, [illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

நன்றி

[illegible]

# RECEIPT

**SRI AHILANDESWARY ARULAHAM**
Kovilkulam (Home for the orphans)
Vavuniya. T.P : 024 2221685

No. 14995
Date: 30/10/2017

Received with thanks from Mr. V. SIVARAJAH.
Address MANN MAGAZINE GERMANY.
the sum of Rupees One Thousand Seven Thousa[nd] Hundred Only.
on account of [illegible]
Name of Bank Branch [illegible] Cheque No.
Dated 960 Euro **SRI AHILANDESWARY ARULAHAM**
Bank of Ceylon

CASH
CHEQUE Rs. 170000/-

S. Akila.
Manager

இறந்தவர்களது குழந்தைகளை இரங்குபவர்கள் காப்போம்
දෙමව්පියන්ට අහිමි දරුවන් අපි ආරක්ෂා කරමු
Parentless Children Pity rescue, Protect them

# HINDU ANPAGAM

Veppankulam, Vavuniya - Sri Lanka 1655

T.P : 024-2223683

திகதி 31/10/17

திரு/திருமதி/செல்வி : வை. சிவராஜா, ஜேர்மனி
விபரம் : [illegible]
[illegible]
நடைபெறும் திகதி : [illegible]
பணம் ரூபா : ஒரு இலட்சத்து இருபதினாயிரம் மட்டும்

நன்றியுடன் பெற்றுக்கொண்டோம்.

120,000/-

இக்கணம்
[signature]
காசாளர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலக நிறுவனம்
Noolaham Foundation

### ஆவணப்படுத்தலை முழுமைப்படுத்த உதவுங்கள்......

நூலக நிறுவனமானது (www.noolaham.foundation.org) 2005 ஆம் ஆண்டு முதல் ஈழத்துத் தமிழ் ஆவணப்படுத்தற் பணிகளை முன்னெடுத்து வரும் ஒரு தன்னார்வ நிறுவனமாகும். கடந்த 13 ஆண்டுகளில் 50,000 க்கும் அதிகமான வெளியீடுகளையும் (www.noolaham.org) 14,000 க்கும் அதிகமான பதிவுகளையும் (www.aavanaham.org) நாம் ஆவணப்படுத்தியுள்ளோம். 30,000 க்கும் அதிகமான பத்திரிகைகளும் 10,000 க்கும் அதிகமான சஞ்சிகைகளும் இவற்றில் உள்ளடங்குகின்றன. இவை முழுக்க முழுக்க இலங்கையிலும் புலம்பெயர் நாடுகளிலும் வாழும் ஈழத்தமிழ்ச் சமூகங்களின் வெளியீடுகள் ஆகும். அவ்வகையில் எமது ஆவணப்படுத்தற் செயற்பாடுகளை முழுமைப்படுத்தும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறோம். குறித்த சஞ்சிகைகள், பத்திரிகைகளின் எல்லா இதழ்களையும் ஆவணப்படுத்தல், குறித்த எழுத்தாளர், நிறுவனத்தின் எல்லா வெளியீடுகளையும் ஆவணப்படுத்தல் போன்றவற்றுக்கு அதிக கவனம் செலுத்தி வருகிறோம். அவ்வகையில் www.noolaham.org வலைத்தளத்தில் இல்லாத நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், மலர்கள், ஆவணங்கள் உங்களிடம் இருப்பின் எமக்குத் தந்துதவுமாறு கேட்டுக் கொள்கிறோம். முழுமையான ஆவணமாக்கல் என்ற இந்த வரலாற்றுக் கடமைக்கு நம்மவர் ஒவ்வொருவரும் பங்களிக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். தொடர்புகளுக்கு: noolahamfoundation@gmail.com

நூலகம்

இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்களின் எழுத்தாவணங்களை எண்ணிமப்படுத்தி ஆவணப்படுத்தும் செயற்பாடுகளை ஊக்குவிப்பதோடு, தகவல் வளங்களையும் அறிவுச்சேகரங்களையும் ஒழுங்குபடுத்தி அனைவருக்கும் கிடைக்கச் செய்துவரும் இலாப நோக்கற்ற தன்னார்வ முயற்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல் மூலங்கள் : நூல்கள் [6,631] இதழ்கள் [10,062] பத்திரிகைகள் [31,085] பிரசுரங்கள் [1,111] நினைவு மலர்கள்[483] சிறப்பு மலர்கள் [646] மாநாட்டு மலர்கள் [32]
பகுப்புக்கள் : எழுத்தாளர்கள் [3,077] பதிப்பாளர்கள் [2,292] வெளியீட்டு ஆண்டு [117]
உசாத்துணை வளங்கள் : நிறுவனங்கள் [1,706] வாழ்க்கை வரலாறுகள் [2,632]
தகவல் அணுக்க நுழைவாயில்கள் : நூலகத் திட்டம் [50,050] குறிச்சொற்கள் [89] வலைவாசல்கள் [25]
சிறப்புச் சேகரங்கள் : முஸ்லிம் ஆவணகம் [221] மலையக ஆவணகம் [135] பெண்கள் ஆவணகம் [85] சுவடியகம் [24]

**புள்ளிவிபரங்கள்**
தன்னார்வப் பங்களிப்பாளர்கள்[216] நிதிக்கொடையாளர்கள;[405] உள்ளடக்கப் பங்களிப்பாளர்கள்[745] ஆலோசகர்கள் [50] செயற்றிட்டங்கள் [48] ஊடாடிய அமைப்புக்கள் [20] ஆவணக்களஞ்சியங்கள் [13] தனிப்பட்ட சேகரங்கள் [13] அதிகாரங்கள் [7] நூலக நண்பர்கள் [71] நூலகம் செய்திகள் [155] வெளியீடுகள் [35] உசாத்துணை சேவைகள் [132] பின்னூட்டங்கள் [40] பக்கப்பார்வைகள் [4,02,10,712]

**அன்பான எழுத்தாளப் பெருமக்களே!...**

மேற்படி நிறுவனத்தின் இயக்குனர்களில் ஒருவரான மூத்த எழுத்தாளர் திரு பத்மநாப ஐயர் அவர்கள் புலம் பெயர் எழுத்தாளர்களின் வெளியீடுகளின் பிரதி ஒன்றை அனுப்பி வைக்குமாறு தொலைபேசியில் உரையாடியதுடன் மேற்படி கடிதத்தையும் எமக்கு அனுப்பி வைத்துள்ளார். ஆகவே உங்களால் எழுதி வெளியீடு செய்யப்பட்ட நூல்களின் / இறுவெட்டுக்களின் ஒரு பிரதியை எனக்கு அனுப்பி வைத்தால் எல்லாவற்றையும் சேர்த்து அவர்களுக்கு அனுப்பமுடியும். ஆகவே தங்களால் வெளியிடப்பட்ட நூலின் / இறுவெட்டின் ஒரு பிரதியை எமக்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். 31-01-2018ம் தேதிக்கு முன்னர் அனுப்பி வைத்தால் பேருதவியாக இருக்கும். அத்தோடு ஆவணப்படுத்தவேண்டிய வேறு யாரது வெளியீடுகள் இருந்தாலும் அவற்றையும் சேர்த்து எமக்கு அனுப்பி உதவுங்கள். இது பற்றிய கருத்துக்களை எம்முடன் பகிர்ந்து கொள்ளலாம்.

-நன்றி-

வ.சிவராசா
பிரதம ஆசிரியர் "மண் சஞ்சிகை" யேர்மனி - 15-01-2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்தித்துளிகள்.....

ஜெருசலேத்தை இஸ்ரேல் தலைநகராக அங்கீகரித்த அமெரிக்கா முடிவு இந்தியா உள்பட 127 நாடுகள் அமெரிக்காவுக்கு எதிராக வாக்களிப்பு இஸ்ரேலின் தலைநகராக ஜெருசேலத்தை அறிவித்த அமெரிக்க அதிபர் டிரம்ப் முடிவை ஐ.நா.சபையின் பொதுக்குழு நிராகரித்து விட்டது. இதற்கு உலக நாடுகள் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன

அதிகமாக வீடியோ கேம்ஸ் விளையாடுவது உளவியல் பாதிப்புகளை ஏற்படுத்தும் என்று உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது. தொடர்ந்து 12 மணி நேரம் வீடியோ கேம் விளையாடுவது நண்பர்களையும், உறவினர்களையும், குடும்பத்தினரையும் எரிச்சலடைய செய்வதுடன், மனநல பாதிப்புகளையும் ஏற்படுத்துவதை உறுதிப்படுத்தியுள்ள உலக சுகாதார நிறுவனம்

Fast food அதிகமானோர் நோயாளிகளாவதற்கும் உடல் பருமனாவதற்கும் துரித உணவுகள் காரணமாக அமைகின்றன துரித உணவுகளால் உடலில் ஏற்படும் மாற்றங்களை ஆராய்ந்தால் வெளித்தோற்றம் விகாரமடைதல், குணப்படுத்த முடியாத நோய்கள் உண்டாதல் மூளையின் இரசாயன கலவையில் பாதிப்பு ஏற்படல், இரத்த நாளங்கள் சுருங்குதல் போன்றவை ஏற்படலாம். சிறிது நேரத்துக்கு கண்ணையும் நாவையும் மகிழ்ச்சிப்படுத்தும் துரித உணவுகளிலிருந்து விடுபட்டு போசனை மிக்க உணவுகளை நாம் உண்ணுவதன் மூலம் சுகமான வாழ்வை வாழலாம்.

மா சேதுங்கின் எழுத்துக் குறிப்புகள் ரூ.5.8 கோடிக்கு ஏலம் சீன கம்யூனிஸ்ட் புரட்சியின் தலைவரான மா சேதுங்கால் எழுதப்பட்ட குறிப்புகளின் தொகுப்பு, 7 லட்சம் பவுண்டுளுக்கும் (சுமார் ரூ.5.8 கோடி) மேல் ஏலத்தில் விற்பனையாகி ஆச்சரியத்தை ஏற்ப டுத்தியுள்ளது. எதிர்பார்த்ததைவிட இது 10 பங்குக்கும் மேல் என்பது குறிப்பிடத்தக்கது

இங்கிலாந்து ராணி எலிசபெத்தின் சம்பளம் 78 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது என இங்கிலாந்து அரண்மனை தெரிவித்துள்ளது. இதன்மூலம் அவரது சம்பளம் 76.1 மில்லியன் பவுண்ட்டாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கை ரூபா மதிப்பின்படி அவரது சம்பளம் 1500 கோடி ஆகும். கடந்த 1953-ம் ஆண்டு ஜூன் 2-ம் தேதி பிரிட்டன் அரியணையில் ஏறியவர் ராணி இரண்டாம் எலிசபெத். இவர் பதவியேற்று 66 ஆண்டுகள் ஆகின்றன.

நிற வித்தியாசம் 2015ல் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பொன்றின்படி, அமெரிக்காவில் மரணிப்பவர்களின் தொகையில் வெள்ளை இன அமெரிக்கர்களை விட கறுப்பு அமெரிக்கர்களின் தொகை 16 சதவிகிதம் அதிகம் எனத்தெரியவந்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**நூல் அறிமுகம்....**

**ஆசிரியர்**

**வேலுப்பிள்ளை நந்தகுமார்**

Email veluppllainandakumar@gmail.com

**தொடர்புகள்....**

V.Nandakumar

Friedrich-Ebert Str 5A

30459-Hannover Tel0511-2350226



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





முல்லைத்தீவு மாவட்டம் கேப்பாபுலவு நில ஆக்கிரமிப்பு, காணாமல்
ஆக்கப்பட்டோரின் உறவுகளின் 300 நாட்கள் தாண்டியும்
முடிவில்லாத மக்கள் போராட்டம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Wissen, Kultur & Literatur • கல்வி, கலை, இலக்கிய சமூக இருமாத இதழ்

# ERDE

MANN
Germany / Ausgabe 187

## இனிய பொங்கல் நல்வாழ்த்துக்கள்



| | | |
|---|---|---|
| வருட சந்தா | ஜேர்மனி | 15€ |
| | எனைய நாடுகள் | 20€ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org